திருத்தணிகை

114 — 145

திருத்தணிகை

எண்	பாடல்	எண்	பாடல்
114	அமைவுற்ற	130	கொந்துவார்
115	அரகர சிவனரி	131	சினத்தவர்
116	இருப்பவல்	132	சினத்திலத்
117	இருமலு ரோக	133	தாக்கமருக்
118	உடலினூடு	134	துப்பாரப்
119	உடையவர்க	135	தொக்கறக்
120	உய்ய ஞானத்து	136	நிலையாத சமுத்தி
121	எத்தனை கலாதி	137	நினைத்தது
122	எலுப்பு நாடி	138	பகலிராவினு
123	எனக்கென	139	பருத்தபற்
124	எனையடைந்த	140	பொற்பதத்தினை
125	ஏது புத்தி	141	முத்துத் தெறி
126	கலை மடவார்	142	வட்ட வாட்
127	கவடுற்ற சித்தர்	143	வரிக்கலையி
128	கனைத்ததிர்	144	வினைக்கின
129	கிறிமொழி	145	வெற்றி செய

காபி 114 (12) (பு) ஆதி-திஸ்ர நடை

அமைவுற்(று) அடைய பசி உற்றவருக்(கு)
அமுதைப் பகிர்தற்கு இசையாதே
அடையப் பொருள் கைக் கிளமைக்கென வைத்து
அருள் தப்பி மதத்(து) அயராதே

தமர் சுற்றி அழப் பறை கொட்டி இடச்
சமன் நெட்டு உயிரைக் கொடுபோகுஞ்
சரிரத்தினை நிற்கும் எனக் கருதித்
தளர்வு (உ)ற்று ஒழியக் கடவேனோ
இமயத்து மயிற்கு ஒரு பக்கம் அளித்
தவருக்கு இசையப் புகல்வோனே
இரணத்தினில் எற்றுவரைக் கழுகுக்(கு)
இரையிட்டிடு விக் ரம வேலா
சமயச் சிலுகிட்டவரைத் தவறித்
தவம் (முற்ற) அருள் புகநாடும்
சடு பத்ம முகக் குக, புக்க தனத்
தணியிற் குமரப் பெருமாளே

நாதநாமக்ரியா/ஷண்முகப்ரியா (9) 115 (பு) ஆதி

அரகர சிவன், அரி அயன் இவர் பரவிமுன்
அறுமுக சரவண பவனே என்று

14 மிகுந்த பசியுடன் வந்தவருக்கு (அமை வுற்று) அமைதியுடன் அன்னத்தைப் பங்கிட்டுத் தருவதற்கு மனம் வராமல்

வைத்துள்ள எல்லாப் பொருளையும், கை வசத்தே, தமது இளமைப் பருவத்துக்கு எனச் சேகரித்து வைத்து, அருள் நெறி யினின்றும் தவறிப் போய், ஆணவக் கொழுப்பால் தளர்ச்சி அடையாமல்
சுற்றத்தார் சுற்றி அழ, பறை கொட்ட, யமன் நெடுந்தூரம் உயிரைக் கொண்டு போகின்ற
இந்த உடலை நிலைத்து நிற்கும் என்று எண்ணி (அதற்காகப் பாடு பட்டுத்) தளர்ந்து அழியலாமோ.
இமவான் வளர்த்த மயில் போன்ற உமாதேவியாருக்கு ஒரு பாகத்தைத் தந்த சிவபெருமானுக்கு மனம் பொருந்த உபதேசித்தவனே!
போரில் தாக்கி எதிர்ப்பவரைக் கழுகுகட்கு இரையாக அளிக்கும் வீரமுடைய வேலாயுதத்தை உடையவனே!
மதப் போராட்டம் செய்பவர் கூட்டத்தினின்றும் விலகி, என் தவம் நிறைவுறவும், (உனது) திருவருளில் புகவும், நான் விரும்புகின்ற
ஆறு தாமரையன்ன திருமுகங்களை உடைய குகனே! (வள்ளியை மணந்த பின் நீ) அடைந்து அமர்ந்துள்ள பெருமை வாய்ந்த தணிகையிற் பெருமாளே.

115

15 பாவங்களைப் போக்க வல்லவராகிய சிவனும், திருமாலும், பிரமனும் ஆக இம்மூவரும் (பரவி) போற்றி நின்று உனது முன்னி லையில் "ஆறுமுகனே! சரவணபவனே! என்று

அநுதினம் மொழிதர அசுரர்கள் கெட, அயில்
அனல் என எழ விடும் அதி வீரா
பரிபுர கமலம் அது அடியிணை அடியவர்
உளம் அதில் உற அருள் முருகேசா
பகவதி வரை மகள் உமை தர வரு குக
பரமனது இரு செவி களிகூர
உரை செயும் ஒரு மொழி பிரணவ முடிவு அதை
உரை தரு குருபர உயர்வு ஆய
உலக மன் அவகில உயிர்களும் இமையவர்
அவர்களும் முநிவர முநிவோரும்

பரவி முன் அநுதினம் மனமகிழ் உற, அணி
பணி திகழ் தணிகையில் உறைவோனே

பகர் தரு குறமகள் தரு அமை வநிதையும்
இருபுடை உறவரு பெருமாளே

116

6 வஸந்தா (20) (+) ஆதி. கண்ட நடை

திருப்பு அவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை அறுத்திடும் என ஓதும்
இசைத்தமிழ் நடத்தமிழ் எனத் துறை விருப்புடன்
இலக்கண இலக்கிய கவி நாலும்

நாள் தோறும் துதிக்க, அசுரர்கள் அழியும்படி, வேலாயுதத்தை
அக்கினி போல் செல்ல விட்ட மகா வீரனே!

சிலம்பணிந்த தாமரையன்ன இரு திருவடிகளையும், அடியார்களின்
௩ உள்ளத்தில் பொருந்த அருளும் முருகேசனே!

பகவதி, மலைமகள் உமை அருள வந்த குகனே! சிவபெருமானது
இரண்டு செவிகளும் மகிழ்ச்சி கொள்ள
(யாவராலும்) போற்றப்படும் ஒப்பற்ற மொழியாம் பிரணவத்தின்
முடிவுப் பொருளை உபதேசித்த குருநாதரே! சிறப்புப் பொருந்திய
உலகத்தில் நிலைபெற்றுள்ள கணக்கற்ற உயிர்களும், தேவர்களும்
முணுமுணுக்கும்படி (வழிபாட்டில் தாம் முந்துதற்கில்லையே என்று
முணுமுணுக்கும்படி) முனிவர்களும்
௪ துதி செய்து, முன் நின்று, நாள் தோறும் மகிழ்ச்சி அடைய,
(அணி) அழகியதும், (வாசுகி என்ற) நாகம் வழிபட்டதுமாகிய திருத்
தணிகையில் உறைகின்றவரே
புகழப்படும் வள்ளிபிராட்டியும், கற்பக விருக்ஷங்களின் நிழலில்
வீற்றிருந்த மாது தேவசேனையும் இரு புறத்தும் பொருந்த
எழுந்தருளியிருக்கும் பெருமானே!

116

(116) இருப்பாக இருந்து வழிக்கு உதவுகின்ற அவல் போன்ற
௧ திருப்புகழானது, அன்போது ஓதுகின்ற அடியார்களின் துன்பங்களை
அறுத்து ஒழிக்கும் என்று கூறுகின்ற
இசைத்தமிழ், நாடகத்தமிழ், (அகப்பொருள்) துறைப் பாக்கள் ஏற்றும்
வகையில், விருப்பமுடன், இலக்கணம் பொருந்திய இலக்கியத்தின் பாற்
படும், நால் வகைக் கவிகளையும் உள்ளத்தில்

தரிப்பவர் உரைப்பவர் நினைப்பவர் மிகச் சக
    தலத்தினில் நவிற்றுதல் அறியாதே

தனத்தினில் முகத்தினில் மனத்தினில் உருக்கிடு
    சமர்த்திகள் மயக்கினில் விழலாமோ
கருப்பு வில் வளைத்து அணி மலர்க்கணை தொடுத்து இயல்
    களிப்புடன் அளித்து எய்த மதவேளை
கருத்தினில் நினைத்து அவன் நெருப்பெழ நுதற்படு
    கறை கணில் எரித்தவர் கயிலாயப்

பொருப்பினில் இருப்பவர் பருப்பத உமைக்கு ஒரு
    புறத்தினை அளித்தவர் தருசேயே

புயற் பொழில் வயற் பதி நயப்படு திருத்தணி
    பொருப்பினில் விருப்புறு பெருமானே.

---

(117) அஸாவேரி (3½) 117 (ம) 2+½

இருமலும் ரோக முயலகன் வாதம்
    எரிகுணை நாசி விடமே/நீ
ரிழிவு விடாத தலைவலி சோகை
    எழுகள மாலை இவையோடே
பெரு வயிறு, ஈளை, எரிகுலை சூலை
    பெரு வலி வேறும் உள நோய்கள்

தவிப்பவர்கள், உரைப்பவர்கள், நினைப்பவர்கள் (ஆகிய அடியார்களை)
(நான்) மிகவும் இவ்வுலகில் சொல்லிப் போற்றுதல் அறியாமலே
(அவர்களைப் புகழாமல்)

தனத்தினாலும், முகப் பொலிவாலும், மனத்தில் உருகச் செய்யும் சாமர்த்தியம் வாய்ந்த பொதுமகளிருடைய மோக மயக்கினில் விழலாமோ?

கரும்பு வில்லை வளைத்து, அழகிய மலர்ப் பாணங்களைத் தொடுத்து, இயல்பாகவுள்ள செருக்குடன், ஒளிந்திருந்து செலுத்தின வலிமை கொண்ட மன்மதனை.

மனத்தினில் நினைத்த மாத்திரத்தினில், அவன் தீயில் வேகும்படி (நுதற்) நெற்றியில் உள்ள நெருப்புக் கண்ணால் எரித்தவரும், கயிலை மலையில் வீற்றிருப்பவரும், இமய மலையில் வளர்ந்த உமா தேவிக்கு ஒரு புறத்தை (இடப்புறத்தைத்) தந்தவருமாகிய சிவபெருமான் அருளிய குழந்தையே!

மேகங்கள் தவழும் சோலைகளும், வயல்களும் உள்ள ஊராகிய சிறப்பான திருத்தணி மலையில் விருப்பங் கொள்ளும் பெருமானே!

117

(117) இருமல் நோயும், முயலகன் எனப்படும் வலிப்பு நோய், வாத நோய், எரியும் குணம் கொண்ட முக்கு நோய், விஷ நோய்கள்

நீரிழிவு, நீங்காத தலைவலி, சோகை, கழுத்தைச் சுற்றி எழுகின்ற கண்டமாலை, இவைகளுடன்

பெரு வயிறு (மகோதரம்), ஈளை (கோழை-இழுப்பு) எரிகின்ற சூலை நோய், சூலை (வயிற்றுவலி நோய்), பெரு வலி (தொழு நோய்), பின்னும் உள்ள வேறு பல நோய்களும்

பிறவிகள் தோறும் எனை நலியாத
படி உனதாள்கள் அருள்வாயே

வரும் ஒரு கோடி அசுரர் பதாதி
மடிய, அனேக இசைபாடி

வரும் ஒரு கால வயிரவர் ஆட
வடிசுடர் வேலை விடுவோனே

தரு நிழல் மீதில் உறை, முகில் ஊர்தி
தரு திரு மாதின் மணவாளா.

சலம் இடை பூவின் நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே.

தோடி (5½) 118 (-) $1\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}$

உடலினூடு, போய் மீளும் உயிரினூடும், மாயாத
உணர்வினூடு வானூடு முது தீயூடு

உலவையூடு, நீரூடு, புவியினூடு, வாதாடு
ஒருவரோடும் மேவாத தனி ஞானச்

சுடரினூடு நால் வேத முடியினூடும் ஊடாடு
துரிய · அகல அதீத சொரூபம்

தொலைவிலாத* பேராசை துரிசு அறுத ஓர் பேதை
தொடும் உபாயம் ஏதோ சொல் அருள்வாயே.

[*தொலைவிலாத பேராசை : (விளக்கம்) பக்கம்: 65]

ஒவ்வொரு பிறவியிலும் என்னைப் பிடித்து வருத்தாத வண்ணம் உன்னுடைய திருவடிகளைத் தந்து அருள்க.

போருக்கு வந்த ஒரு கோடி அசுரசேனைகள் இறந்து படவும், அனேக இசைப் பாடல்களைப் பாடிக் கொண்டு

வந்த நிகரற்ற கால பைரவர் நடம் ஆடவும், கூரிய ஒளி வீசும் வேலாயுதத்தை செலுத்தினவனே!

கற்பக விருட்சங்களின் நிழலில் வாழ்கின்ற மேக வாகனனும் இந்திரன் தந்த, அழகிய தேவசேனையின் மணவாளனே

கடல் நீரால் சூழப்பட்ட (இந்தப்) பூமியின் மத்தியில் சிறப்புற்றோங்கும் தணிகை மலையில் வீற்றிருக்கும் பெருமாளே.

118

(118) உடல் உள்ளதும், அந்த உடலில் போய் மீண்டு வருகின்ற உயிரினுள்ளதும், அழிவிலாத உணர்ச்சியுள்ளதும், ஆகாயத்தினுள்ளதும், முற்றின தீயினுள்ளதும்,

காற்றினுள்ளதும், நீரினுள்ளதும், மண்ணினுள்ளதும் (சமய) வாதம் செய்கின்ற எவரிடத்தும் காணக்கிடையாத ஒப்புற்ற தாரை

ஒளியினுள்ளதும், நான்கு வேதங்களின் உச்சியினுள்ளதும் ஒடாகின்றதும், யோகியர் தன் மயமாய் நிற்கும் உயர்நிலையில் உள்ளதும், துன்பங்கள் கடந்த நிலையில் உள்ளதுமான சிவரூபத்தை

முடிவில்லாத பேராசையும், குற்றமும் நீங்காத ஒரு மூடனாகிய நான், அடைவதற்குரிய உபாய வழி எதுவோ. அதை — அந்த உபதேசச் சொல்லைச் சொல்லி அருள்வாயாக.

மடல் அறுத வாரிச அடவி சாடி, மாருண
வரி வரால் குவால் சாய — அமராடி

மதகு தாவி மீதோடி உழவரால் அடாது ஓடி
மடையை மோதி அறாடு — தடமாக

கடல் புகா மகா மீனை முடுகி, வாளை தான் மேவு
கமல வாவி மேல் வீழு — மலர் வாவி

கடவுள் நீலம் மாருத <u>தணிகை காவலா வீர</u>
கருணை மேருவே தேவர் — <u>பெருமானே.</u>

119

(119) <u>நளின காந்தி</u> — <u>ஆதி-தேசாதி</u>

உடையவர்கள் ஏவர் எவர்கள் என நாடி
உள மகிழ ஆசு — கவி பாடி
உமது புகழ் மேரு கிரி அளவும் ஆனது
என உரமும் ஆன — மொழி பேசி
நடை பழகி, மீள வறியவர்கள், நாளை
நடவும் என, வாடி — முகம் வேறாய்

நலியும் முனமே உன் அருண ஒளி வீசும்
II <u>நளின இரு பாதம்</u> — <u>அருள்வாயே</u>

(திருத்தணித் தாமரைக்குளத்தில் வாழும் வாளை மீனானது)
இதழ்கள் நீங்காத தாமரைக் காட்டைத் துகைத்துத் தாவிக் குதித்து, (அங்கே) தனக்குப் பகையாயிருந்த, வரிகள் படர்ந்த வரால் மீன் கூட்டங்கள் தோல்வியுற்று பின் வாங்கி ஓடும்படி போர் புரிந்து, பின்பு
(வழியிலிருந்த) மதகை (நீர் பாயும் மடையை) தாவித் தாண்டி மேலே ஓடி (அங்குள்ள உழவர்கள்) தன்னை வருத்தாதபடி விலகி ஓடி, ஓடைகளில் மோதிச் சென்று பின்னர், அந்த ஓடைகள் சேரும் ஆற்றின் வழியே சென்று
கடலிற் புகுந்து அங்குள்ள பெரிய மீனை ஓடும்படி செய்து – வாளை மீனானது – தான் முதலில் இருந்த தாமரைக் குளத்தில் வந்து விழும் இத்தகைய அந்த மலர்ச்சுனையில்
தெய்வ மணமுள்ள நீலோற்பலம் மலர்வது என்றும் தவறாத தணிகை அரசே! வீரனே! கருணை மேருவே! தேவர் பெருமானே.

119.

(119) செல்வம் உடையவர்கள் எவர்கள் எவர்கள் என்று தேடிச் சென்று அவர்கள் மனம் மகிழும்படி. அவர்கள் மீது ஆசுகவிகளைப் பாடியும்
உமது புகழ் மேரு மலையின் அளவு போல உயர்ந்தது என்று மிகப் பலமான துதி மொழிகளைப் பேசியும்
நடந்து நடந்து பல நாள் போய்ப் பழகியும், (வறியவர்கள் மீளா) தரித்திரர்களாகவே மீளும்படி, "நாளைக்கு வா நாளைக்கு வா" என்றே அவர்கள் கூற, நான் வாட்டமடைந்து முகம் களைமாறிச் சோர்ந்து
வருந்தும் முன்னரே உன்னுடைய சிவந்த ஒளி வீசும் தாமரை யன்ன இரண்டு திருவடிகளையும் தந்து அருள் புரிவாயாக.

விடை கொளுவு பாகர் விமலர் திரிசூலர்
விகிர்தர் பரயோகர் நிலையோடே
விளவு சிறு தூள நகு தலையொடு ஆறு
விட அரவு சூடும் அதிபார;

சடை இறைவர் காண உமை மகிழ ஞான
தனர் நடை இடா முன் வருவோனே
தவ மலரும் நீல மலர்சுனை அநாதி
தணிமலை உலாவு பெருமானே

[விடை கொளுவு பாகர்: (விளக்கம்) பக்கம்: 65]

120 வலிதா (2½) 120 (ம) ½+1
உய்ய ஞானத்து நெறி கை விடாது எப்பொழுதும்
உள்ள வேதத்துறை கொடு உணர்வுதி
உள்ள மோகத்து இருளை விள்ள, மோகப் பொருளை
உள்ள மோகத்து அருளி உறவாகி

வையம் எழுக்கும் நிலை செய்யும் நீதிப் பழைய
வல்ல மீது உற்பல சயில மேவும்
வள்ளியார் நின் புதிய வெள்ளில் தோய் முத்த முறி
கிள்ளி வீசுற்று மலர் பணிவேனே

[வையம் எழு: (விளக்கம்) பக்கம்: 65]

இடப வாகனத்தை உடையவர், பரிசுத்தமானவர், முத்தலைச் சூலத்தை ஏந்தினவர், (விகிர்தர்) உயர்ந்தவர், கடவுள், மேன்மையோகத்தினர், நிலவுடனே விளா (கூவிளம்-வில்வம்), சிறிய பூளைச் செடியின் பூ, பல்லொடு கூடிய வெண்தலை, கங்கையாறு, விஷப்பாம்பு இவைகளைச் சூடியுள்ள அதிக பாரமுள்ள

சடைப் பெருமான் காணவும், உமாதேவி மகிழவும், ஞானத் தளர் நடை இட்டு அவர்கள் முன்பு வருபவனே!

விருத்தியாக மலரும் நீலோற்பலச் சுனையை உடைய, ஆதியில்லா ததுமாகிய (மிகப்பழைய) திருத்தணிகை மலையின் மீது உலாவுகின்ற பெருமானே.

120

(120) (பிறவித் துன்பத்தினின்றும்) உய்யும் பொருட்டு, (நான்) ஞான மார்க்கத்தைக் கை விடாது எப்பொழுதும் (கை விடாது) பற்றி, உள்ள வேத சாஸ்திரங்களைக் கொண்டு அறிவு தெளிவுற ஓதி

எனக்குள்ள மயக்க இருள் நீங்க, ஆசை வைக்க வேண்டிய ஞானப் பொருளைக் (உன்னை) கருதும்படியான ஆசை (உன்) அருளுதவியாற் கிடைத்து, உன்னிடத்தில் நட்பு வைத்து

உலகு ஏழையும் நிலை நிறுத்திக் காக்கும் நீதியனே! பழைய திருவல்லம் என்னும் தலத்திலும், நீலோற்பல கிரியிலும் வீற்றிருக்கும் (வள்ளியாள்) கருணையனே! உன்னைப் புதிய வில்வமரத்திலுள்ள மகிழ்ச்சி தரும் கொழுந்து இலைகளைக் கிள்ளி) வீசிப் பூசித்து உன் மலரடிகளைப் பணிய மாட்டேனோ!

13

வ அரானவப் புனையும் ஐயர் பாகத் தலைவி
தூய்ய வேணிப் பகிரதி குமாரா
வைய மால் பற்றி வளர் சைய மேல் வைக்கும் முது
நெய்யனே சுற்றிய குறவர் கோவே

செய்யு மால் வெற்பு உருவ வெய்ய வேல் சுற்றி விடு
கைய, மால் வைத்த திரு மருகோனே

தெய்வ யானைக்கு இளைய, வெள்ளை யானைத் தலைவ
தெய்வயானைக்கு இனிய பெருமானே

|21|

(121) கானடா (5½) (ட) 1+1½+1½+1½

எத்தனை கலாதி சித்து அங்கு எத்தனை வியாதி பித்து அங்கு
எத்தனை சர அசரத்தின் செடம் ஆன
எத்தனை விடா வெருட்டு அங்கு எத்தனை வல் ஆண்மை, புறு அங்கு
எத்தனை கொல் ஊனை நித்தம் பசி ஆறல்

பித்து அனையன் நான் அகட்டு உண்டு இப்படி கெடாமல் முத்தம்
பெற்றிட நிறை சனத்தின் செயலான

வெற்றியும் உராது நிற்கும், தத்த குரு தார நிற்கும்
வெத்தூம் உராது நிற்கும் கழல் தாராய்

படத்தை உடைய பாம்பை அணியும் தலைவராகிய சிவபெருமானின் (இடது) பாகத்தில் உள்ள பிராட்டி பார்வதி. பரிசுத்தமான சடையில் உள்ள கங்கை இவர்களின் குமாரனே!

மெல்ல அன்பு பற்றி வளர்ந்த வள்ளிமலை மேல் வைத்த முற்றின நேயம் கொண்டவனே! சுற்றமாய் அமைந்த குறவர்கட்குத் தலைவரே! (மால் செய்யு) மயக்கத்தைச் செய்யும் கிரௌஞ்ச கிரியை உருவிச் செல்லும்படி வெப்பமான வேலாயுதத்தை சுழற்றி விட்ட கரத்தனே! அன்பு வைத்த இலக்குமி தேவிக்கு மருகனே!

தெய்வத்தன்மையுடைய கணபதிக்கு இளையவனே! வெள்ளை யானை ஐராவதத்துக்குத் தலைவனே! தெய்வயானை யம்மையாருக்கு இனிய பெருமானே

121

(121) எத்தனை கலகச் சண்டைகள், மாய வித்தைகள், எத்தனை நோய்கள் எத்தனை வைத்தியச் செயல்கள், எத்தனை இயங்கு திணை நிலைத் திணைப் பொருள்கள் கொண்ட இப்பிரபஞ்சத்தில் எடுத்த உடல்கள் எத்தனை நீங்காத அச்சம் உறுத்தும் செயல்கள்; எத்தனை வலிமையுடைய ஆண்மைச் செயல்கள்; எத்தனை ஆசைகள்; எத்தனை மாமிசத்தை உண்டு பசியைப் போக்கும் செயல்கள்

பித்தம் பிடித்தவன் போன்ற நான், வயிற்றில் உண்டு, இவ்வண்ணம் கெடாமல், (பிறவியினின்றும்) விடுதலையைப் பெற்றிட, நினது (பக்த) ஜனங்களின் (அடியார் கூட்டத்தின்) செயல்களான தன்மையையும், யாரும் உணர்தற்கு அரிதாய் நிற்பதும், பரவிப் பிரகாசிக்கின்ற ஒளி மயமான பிரணவப் பொருளாய் நிற்பதும், பாச பந்தத்தால் அறிதற்கரியதாய் நிற்பதும் ஆகிய உனது திருவடியைத் தந்தருளுக

(குரு = ஒளி; தாரம் = பிரணவம்)

5

தத்தன தன தனத்தந் தத்தன தன தனத்தந்
தத்தன தன தனத்தந் தகுதீதோ
தக்குகு டுடு டிட்டுண் டிக்குகுகு டகு தத்தந்
தத்தன தனன தூர்த்துங் சதபேரி
சித்தர்கள் நிடாதர் வெற்பின் கொற்றவர் சுவாமி பத்தர்
திக்குகள் நூர் நால் கிரட்டின் கிரிதுழ
செக்கண் அரிமா கனக்கும் சித் தணிகை வாழ், சிவப்பின
செக்கர் நிறமாயிருக்கும் பெருமானே

(2) நீதி கௌளை (7½) 122 (–) ½+2+4.

எலும்பு நாடிகள் அப்பொடு இரத்தமொடு
அழுக்கு மூளைகள் மச்சொடு கொட்டிழு
இருக்கும் வீடு அதில் எத்தனை தத்துவ சதிகாரர்
கிறப்பர், தூது அகவர் சுதர், அப் பதி
உழப்பர், பூமி தரிப்பர் பிறப்புடன்
இருப்பர் வீடுகள் கட்டி அலட்டுறும் சகுசாரம்
கெலிப்பர், மால் வலைப்பட்டு உறு துட்டர்கள்,
அழிப்பர் மாதவம் முற்று நினைக்கிலர்
கெடுப்பர் யாரையும் மித்திர குத்திரர் கொலைகாரர்

கிருத்தர் கோளகர் பெற்று திரிக் களவு
அரிப்பர், சூட்கர் எத்தனை வெப்பிணி
கெலிக்கும் வீடதை நத்தி எடுத்து கிவண் உழல்வேனோ (மு)

தத்தன தன தனத்தந், தத்தன தன தனர்த்தண், தத்தன தன
தனத்தந் தகு தீதோ.
தக்குகு டுகு டுட்டுண் டிக்கு குகு ; டகு தத்தந் தத்தன தனனா
னார்த்துந் என்று ஒலிக்கின்ற நூற்றுக்கணக்கான முரசுகளின் ஒலியுடன்
சித்தர்களும் (வெற்பின் நிடாதர்) மலை வேடர்களும், அரசர்களும்,
கடவுள் அடியார்களும், திக்குகள் எட்டிலும் மலையை வலம் வர
சிவந்த கண்களையுடைய சிங்கம் ஒலி செய்யும். ஞானத் தணிகை
(மலையில்) வாழ்கின்ற. மிகச் சிவந்த நிறத்துடன் விளங்கும் பெருமானே

122

(122) எலும்பு, நாடிகள், நீர், இரத்தம், அழுக்கு மூளைகள், இழிவைக்
கொண்ட புழு, இவைகள் இருக்கும் வீடு; அத்தகைய வீட்டில்
எத்தனை குணத்து மோசக்காரர்கள்,

அநீதி செய்பவர்கள், சூதான உள்ளத்து மக்கள், அந்த ஊரில்
(தமது பேச்சால்) மழுப்புபவர்கள், பூமியில் தோன்றுவர், (பிறந்து)
பிறப்புடன் இருப்பர், வீடுகள் கட்டி அலைச்சலுறும் சம்சாரத்தில்
வெற்றி பெறுவார்கள், மோக வலையிற் பட்டுக் கிடக்கும் துஷ்டர்கள்,
அழிப்பார்கள் பெரிய தவநிலையை. அந்தப் பெரிய தவ நிலையைச்
சற்றேனும் நினைக்க மாட்டார்கள்; கெடுப்பார்கள் யாவரையும்,
நண்பர்க்கு வஞ்சனை செய்வார்கள், கொலைகாரர்கள்
செருக்குள்ளவர்கள், கோள் சொல்லுபவர்கள், தீமையைப் பெற்று
திரிந்து களவுத் தொழிலில் நினைவு கொண்டவர்கள், லோப உள்ளத்
தினர், எத்தனை கொடிய நோய்கள், இவைகளை எல்லாம் பெற்றுக்
கொள்ளும் வீடாகிய இவ்வுடம்பை விரும்பி, ஆசையுடன் எடுத்து
இவ்வுலகில் திரிவேனோ

7 துவிப்பல் பேரிகை உக்ர அமர்க்களம்
எதிர்த்த சூரரை வெட்டி கிருட்கிரி
உடைத்து வானவர் சித்தர் துதித்திட விடும் வேலா

உழுத்த ராவணனைச் சிரம் இற்றிட
வதைத்து மாபலியைச் சிறை வைத்தவன்
உலக்கை ராவி நடுக்கடல் விட்டவன் மருகோனே

வலிக்க வேதனை குட்டி நடித்து அரு
செகந்தை ஈனவள் பச்சை நிறத்தியை
மணத்த தாதை பரப்ரமருக்கு அருள் குருநாதா

வனத்தில் வாழும் மயில் குலம் ஒத்திடு
குறத்தியாரை மயக்கி அணைத்து உள
மகிழ்ச்சியோடு திருத்தணி பற்றிய பெருமாளே!

3) <u>மாயாமாளவ கௌளை</u> (8) 123 (✓) ஆதி

எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலந் தனில் ஐயா
எடுத்திடு காயம் தனைக் கொடு மாயும்
இலச்சை இலாது என் பழம் மாற
<u>உனைப் பல நாளும் திருப்புகழாலும்</u>
<u>உரைத்திடுவார் தங்கு</u> உளமேவி

ஒலிக்கின்ற பல வங்க பேரிகை வாத்தியங்களுடன் கருமை
யான போர்க்களத்தில் எதிர்த்து வந்த அசுர வீரர்களை வெட்டி
அழித்து, இருள் மாயை செய்து வந்த கிரௌஞ்ச மலையைப்
பிளந்தெறிந்து, வானவரும் சித்தர்களும் துதிக்கச் செலுத்திய வேலனே.

ஆசையுடைய இராவணனுடைய சிரங்கள் அற்று விழுமாறு
செய்து அவனை வதைத்து, மாவலியைச் சிறை வைத்தவன்,
உலக்கையை ராவி (அரத்தால் பொடி செய்து) நடுக்கடலில்
எறிந்தவன் ஆகிய திருமாலின் மருகனே!

வலி உண்டாகும்படிப் பிரமனைக் குட்டி, நடனம் செய்து
ஒப்பற்ற உலகங்களை ஈன்ற பச்சை நிறத்துப் பார்வதி தேவியை
மணந்த தந்தை பரப்பிரம பொருளாம் சிவபெருமானுக்கு
(உபதேசம்) அருளிய குருநாதனே!

வள்ளிமலைக் காட்டில் வாழும், மயிலினம் போன்ற குறத்தி
வள்ளி பிராட்டியை மயக்கி அணைத்து உள்ளத்தில் மகிழ்ச்சி
யோடு திருத்தணிகையிற் பற்று வைத்து வீற்றிருக்கும் பெருமானே

123

(123) எனக்கென்றே எல்லாம் சேகரிக்க வேண்டி, நாள் தோறும்
இளைப்பு உண்டாகும்படி (உழைத்து) காலக்கணக்கில்
ஓய்வில்லாமல்

எடுக்கின்ற தேகங்களைக் கொண்டு (அடைந்து) பின்னர் இறந்து
போம் வெட்கம் அழிய, என் பிறப்பு அற

உன்னைப் பல நாளும், திருப்புகழ் ஓதிப் புகழ்வோர்கள்
இருக்கும் இடத்துக்குச் சென்று (அங்கு)

19 உணர்த்திய போதம் தனைப் பிரியாது நண்
பொலச் சரண் நானும் தொழுவேனோ

வினைத் திறமோடு அன்று எதிர்த்திடும் வீரன்
விழக் கொடுவேள் கொன் றவன் நீயே

வினைப்பெண, மேல் என்று இடக்கு அயனும்
விருப்புற வேதம் புகல்வோனே

சினத்தொடு சூரன் தனைக் கொடுவேலின்
சிரத்தினை மாறும் முருகோனே
தினைப்புன மேவும் குறக் கொடியோடும்
திருத்தணி மேவும் பெருமானே

124

4 அனந்த பைரவி (16½) (ம) 3|3|3 0 திஸ்ர நடை
எனை அடைந்த குட்டம் வினை இருந்த பித்தம்
எரி வழங்கு வெப்பு வலி பேசா
இகலி நின்று அலைக்கும் முயலகன் குலைப்பொடு
இருமல் என்று உரைக்கும் இவையோடே

மனைகள் பெண்டிர் மக்கள் தமை நினைந்து சுத்த
மதி மயங்கி விட்டு மடியாதே
மருவி இன்று எனக்கு மரகதம் சிறக்கு
மயிலில் வந்து முத்தி தரவேணும்

அந்த அடியார்கள் உணர்த்திய ஞான வாசகங்களைக் கடைப் பிடித்து அதனின்றும் விலகாமல், ஒளி வீசும் (உனது) அழகிய திருவடியை தொழும் பாக்கியம் எனக்குக் கிட்டுமா!

தொழிலில் திறமையுடன், அன்று எதிர்த்து அம்பு எய்த வீரனும் மன்மதன் வெந்து விழும்படி, கொடிய மன்மதனை எரித்த சிவபெருமான (உன்னை நோக்கிக் "குழந்தாய்") நீயே

(பிரணவப் பொருளை) விளம்புவாயாக என்று கூற, தான் மேலானவன் என்று (முதலில் உன்னை வணங்காது) முரண் செய்த பிரமனும் விரும்பி மகிழ, வேதப் பொருளை உரைத்தவனே!

கோபத்துடன், சூரனைக், கடுமை கொண்ட வேல் கொண்டு (அவனுடைய) சிரத்தைத் தள்ளி ஒதுக்கின முருகோனே!.

தினைப்புனத்தில் வாசஞ் செய்த குறப்பெண் வள்ளியுடன் திருத்தணிகையில் வீற்றிருக்கும் பெருமானே.

124

(124) எனக்கு வந்த குட்ட நோய், வினைக்கு ஈடாக மிகுத்து வரும் பித்தம், கொதிப்பைத் தரும் வெப்பு நோய் (சுரம்).. வலி சொல்ல முடியா வண்ணம்

மாறுபட்டு வேதனை தந்து நின்று வருத்தும் முயலகன் என்னும் இழுப்பு நோய், நடுக்கம் தரும் நோய், இருமல் என்று சொல்லப்படும் இந்நோய்களுடனே (உடாடி)

வீடுகள், பெண்கள், மக்கள் என்பவற்றை நினைந்து, நல்ல அறிவு மயக்கம் அடைந்து (நான்) இறந்து போகா வண்ணம்

(நீ) தோன்றி இன்று எனக்கு, மரகத ஒளி வீசும் பச்சை மயிலின் மீது எழுந்தருளி முத்தி தர வேணும்.

நினை வணங்கு பக்தர் அனைவரும் தழைக்க
நெறியில் நின்ற வெற்றி முனைவேலா
நிலை பெறும் திருத்தணியில் விளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கும் குருகோனே
தினை விளங்கல் உற்ற புனை இளம் குறத்தி
செயல் அறிந்து அணைக்கும் அணிமார்பா

திசைமுகன் திகைக்க அசுரர் அன்று அடைத்த
சிறை திறந்து விட்ட பெருமானே!

5) ஹம்ஸாநந்தி (3½) 125 1½+2
ஏது புத்தி ஐயா எனக்கு இனி
யாரை நத்திடுவேன் அவத்தினிலே
இறத்தல் கொலோ எனக்கு நீ தந்தை தாய் என்றே
இருக்கவும் நானும் இப்படியே
தவித்திடவோ சகத்தவர்
ஏசலிற் படவோ நகைத்தவர் கண்கள் காணா
பாதம் வைத்திடையா தெரிந்தென்னை
தாளில் வைக்க நீயே மறுத்திடில்
பார் நகைக்கும் ஐயா தகப்பன் முன் மைந்தன் ஓடி

பால் மொழிக் குரல் ஓலம் இட்டிடில்
யார் எடுப்பது என வெறுத்து அப்-
பார் விடுப்பார்களோ எனக்கு இது சிந்தியாதோ

உன்னை வணங்கும் பத்தர் யாவரும் சுகத்துடன் வாழ (அவர்களுக்கு) (அருள் பாலிக்கும்) வழியில் நிற்கும், வெற்றி பெறும் கூரிய வேலாயுதரே
அழியாது நிலைத்து விளங்கும் திருத்தணியில் விளங்குகின்ற அழகிய பெருமை வாய்ந்த மலையில் நிற்கும் முருகனே!
தினை செழித்து விளங்கும் புனத்தில் இருந்த இளைய குறத்தி வள்ளியின் (பக்திச்) செயலை அறிந்து (அவளை) அணைத்த அழகிய மார்பனே!
பிரமன் திகைத்து நிற்கும்படி, அசுரர்கள் அன்று (தேவர்களை) அடைத்த சிறையைத் திறந்து விட்ட பெருமானே!

126

(125) ஏது புத்தி ஐயா எனக்கு, இனி (நான்) யாரை விரும்பி நாடுவேன், வினை (பிறவிப் பயனைப் பெருமல்) இறப்பது தானோ (என் தலைவிதி) எனக்கு நீயே தந்தை தாய் என்று

இருந்தும் நான் இப்படித் தவித்திட லாமா! உலகத்தவரின் இகழ்ச்சி மொழிக்கு ஆளாகலாமா! என்னை இகழ்ந்து சிரித்தவர் கண்கள் காணும்படி (கண் முன்னே. உனது)
திருவடியை (என் சென்னி மீது) வைப்பாயாக (திருவடி தீக்ஷை தந்தருளுவாயாக) ஐயனே!. (என் நிலை) தெரிந்து என்னை உனது திருத்தாளிற் சேர்க்க நீயே மறுப்பாயானல் உலகோர் நகைப்பர், தந்தையின் முன் குழந்தை ஓடிச் சென்று –
பால் மணம் மாறுத குரலில் அழுதால், யார் (இந்தக் குழந்தையை) எடுப்பது என்று வெறுத்து அழும்படி இப்பூமியில் விட்டு விடுவார்களோ! (மாட்டார்கள்) என் விஷயத்தில் இந்த நியாயத்தைத் தங்கள் திருவுள்ளம் நினைத்தருளாதோ?

23
ஓதம் உற்று எழு பால் கொதித்தது
போல எண் திசை நீச முட்டரை
ஆட வெட்டிய பாநு சத்தி கை — எங்கள் கோவே

ஓதம் மொய்ச்சடை ஆட உற்று அமர்
மான் மழுக்கரம் ஆட பொற்கழல்
ஓசை பெற்றிடவே நடித்தவர் — தந்த வாழ்வே
மா தினைப்புன மீது இருக்கும் மை
வாள் விழிக் குற மாதினைத் திரு
மார்பு அணைத்த மயூர அற்புத — கந்த வேளே
மாரன் வெற்றி கொள் பூ முடிக்குழ
லார் வியப்புற நீடு மெய்த்தவர்
வாழ் திருத்தணி மா மலைப்பதி — தம்பிரானே

---

(6) ஆனந்த பைரவி (3½) 126 (ட) 2+1½

கலை மட வார் தம் சிலை அதனாலும்
கணை விழியாலும் — கரைமேலே
கருகிய காளம் பெருகிய தோயம்
கருதலையாலும் — சிலையாலும்

கொலை தரு காமன் பல கணையாலும்
கொடி இடையாள் நின்று — அழியாதே

வெள்ளமாய்ப் பெருகியெழும் பால் கொதித்தது போல. எட்டுத் திசைகளிலும் இருந்து போர் செய்ய வந்த. இழிந்த மூடர்களான அசுரர்களை பின்னிட்டு ஓடும்படி வெட்டி அழித்த கூரிய ஒளி கொண்ட சக்தி வேலைக் கையிற் கொண்ட எங்கள் அரசே!

கங்கை வெள்ளம் நெருங்கும் சடை ஆடவும். பொருந்தி இருக்கும் மான் மழு ஏந்திய திருக்கரங்கள் ஆடவும். அழகிய வீரக்கழல் இனிது ஒலிக்கவும், நடனம் புரிந்தவர் அளித்த செல்வமே!

பெரிய தினைப்புனத்தின் மீது இருக்கும், மை பூசிய ஒளி பொருந்திய கண்களையுடைய, வள்ளி பிராட்டியை அழகிய மார்பில் அணைத்த மயில் வாகனனே! அற்புத செயல்களைச் செய்யும் கந்தவேளே!

மன்மதன் வெற்றி பெறும்படியான (அழகு வாய்ந்த) பூ முடித்த கூந்தலை உடைய மாதர்கள் ஆச்சர்யப்படும்படியான, பெரிய உண்மைத் தவசிகள் வாழும் திருத்தணி மாமலைப் பதித் தம்பிரானே!

126

(126) மேகலையாகிய இடை அணிகள் பூணும் பெண்களின் (சிலே: ஒலி) வசைப் பேச்சின் ஒலியாலும், பருத்த (வளை: சங்கு) சங்கின் ஒலியாலும், கரை மேல் இருந்து கூவும்.

(காளம்- எக்காளம் - ஒரு வாத்தியம்: மன்மதனுக்கு எக்காளம் குயில்) கரிய காளத்தாலும் (குயிலின் ஓசையாலும்) பெருகியுள்ள நீராலும் (கடலொலியாலும்), எண்ணி எண்ணிக் கருதும் சிந்தனையாலும், வில்லிடத்தே அசைகின்ற

கொலை செய்ய வல்ல மன்மதனது பல பாணங்களாலும் கொடி போன்ற இடையை உள்ள இவள் (தலைவி) கவலைப் பட்டு நின்று அறிவு படாமல்

25

ரேவு அணி நீடும் புயம் அணி நீபஙு

குளிர் தொடை நீ தந்து — அருள்வாயே

சிலை மகள் நாயன் கலைமகள் நாயன்

திருமகள் நாயன — தொழும் வேலா

தினை வன மானும் கநவன மானும்

செறிவுடன் மேவும் — திருமார்பா

தலமகள் மீது எண் புலவர் உலாவும்

தணிகையில் வாழ் செங் — கதிர்வேலா

தனியவர் கூரும் தணி கெட நாளுந்

தணி மயில் ஏறும் — பெருமானே.

127 தேசு (5) 127 (ம) 1+1½+1½+1

கவுற்ற சித்தர், சட் சமய ப்ரமத்தர், நற்

கடவுள ப்ரதிஷ்டை, பற் — பலவாகக்

கருதிப் பெயர்க் குறித்து உரு வர்க்கம் இட்டு, இடர்க்

கருவிற் புகப் பகுத்து — உழல்வான் ஏன்

சவடிக்கு இலச்சினைக்கு இரு கைச் சரிக்கு, மிக்க

சரப் பணிக்கெனப் — பொருள் தேடி

குரா மலரைத் தரித்துள்ள நீண்ட புயத்தில் அணிந்துள்ள குளிர்ந்த கடப்ப மலர் மாலையை நீ தந்து அருள் புரிவாயாக. பர்வத ராச புத்திரியின் தலைவனான சிவன், சரஸ்வதியின் தலைவனான பிரமன், இலக்குமியின் தலைவனான திருமால் மூவரும் தொழும் வேலை

தினைப்புனத்தில் இருந்த மான்போன்ற வள்ளியும், விண்ணுலகத்துள்ள மேன்மை பொருந்திய கற்பக வனத்தில் வளர்ந்த தேவசேனையும் நெருங்கி அணையும் திருமார்பனே!

நிலமகளாகிய பூமி மீது மதிக்கப்படும் தேவர்கள் வந்து உலவும் திருத்தணிகையில் வாழும் சிவந்த ஒளி பொருந்திய வேலாயுதரே.

சுற்றமும் பற்றும் ஒழித்துத் தனிமையை விரும்பித் தனித் தவம் மிகச் செய்யும் தன்மையாளரின் தனிமை நீங்க (அல்லது- திக்கற்ற அடியார்களின் திக்கற்ற தன்மை நீங்க) நாள் தோறும் ஒப்பற்ற மயிலில் ஏறி வந்து அவர்களுக்கு உதவும் பெருமானே.

127

(127) மறைத்து வைக்கும் தன்மையுள்ள சித்தர்களும், ஆறு சமயங்களை மேற்கொண்டு வாதிடும் வெறியர்களும், சிறந்த கடவுள திருவுருவங்களை பிரதிஷ்டை செய்து, பலப்பல வகையாக சிந்தித்து, (அந்த உருவங்களுக்கு ஏற்ற) பெயர்களையும் சூட்டி உருவ அமைப்புகளை ஏற்படுத்தி, துன்பத்துக்குக் காரணமான உட்பொருளிற் புகுதற்கு ஏதுவான பிரிவினை உணர்ச்சியுடன் ஏன் அலைகிறார்கள்.

(சவடி) பொற்சரடில் கோத்த கழுத்தணிக்கும், முத்திரை மோதிரத்துக்கும், இரண்டு கைகளிலும் அணியப்படும் வளையல் (வகை) மேலான வைரத்தாலான கழுத்தாபரணத்துக்கும் கொடுக்க வேண்டி பொருள் தேடிய மாக்கள்,

சகலத்தும் நற்றைப்பட்டு அயல்பட்டு நிற்கும் நின்
சரண ப்ரசித்தி சற்று உணராரோ

குவடு எட்டும் அட்டு நெட்(டு) உவரிக் கணத்தினைக்
குமுறக் கலக்கி விக்ரம சூரன்
குடலைப் புயத்தில் இட்டு உடலைத் தறித்து உருத்து
உதிரத்தினில் குளித்து எழும் வேலா

சுவடு (உ)ற்ற அற்புதக் கவலைப் புனத்தினில்
துவலை சிமிழ்த்து நிற் பவள் நாண

தொழுது எத்து முத்த மொழும் புரிசைச் செருத்தணிச்
சுருதித் தமிழ்க் கவி பெருமானே.

கானடா (1½) 128 (ங) (½+1½+½+1½+2+½+2)

கனைத் (து) அதிர்க்கும் இப் பொங்கு கார்க்கடல் நன்றிலையே
கறுத்து அறச் சிவந்(து) அங்கி வாய்த்து எழு திங்களாலே

தனிக் கருப்பு விற் கொண்டு வீழ்த்த சரங்களாலே
தகைத்து நுருத்தி எய்த்து இங்கு யாக்கை சழங்கலாமோ

எல்லாவற்றிலும் ஒன்றுபட்டுக் கலந்தும் (ஏகிபாவமாக வியாபித்திருந்தும்) அவைகளில் கலவாது வேறுபட்டு நிற்கும், உனது திருவடியின் கீர்த்தியைச் சிறிதேனும் உணர மாட்டார்களோ! (ஐயோ! பாவம்!)

மலைகள் எட்டையும் வருத்தி, நீண்ட கடலின் திரட்சியை ஒலி செயக் கலக்கி, பராக்ரமம் வாய்ந்த சூரனுடைய குடலைத் தனது புயத்தில் மாலையாக அணிந்து, அவனுடைய உடலைத் துண்டம் செய்து (உருத்து) கோபித்து, அவனது ரத்தத்தில் குளித்து எழுந்த வேலாயுதத்தை உடையவனே!

வள்ளி நாயகியின் பாதச் சுவடுகளை உடைய, அற்புதமான செந்தினைக் கொல்லையில், உதிரி மலர்களை மாலையாகக் கட்டி நின்ற வள்ளியம்மை நாணம் கொள்ளும்படி

அவளைத் தொழுது போற்றி நின்ற (முத்தனே) பாசங்களில் நீங்கியவனே! அழகிய மதில் சூழ்ந்த, திருத்தணியில் எழுந்தருளியிருக்கும், (சம்பந்தராய்) தமிழ் வேதமாகிய தேவாரத்தைத் தந்தருளிய பெருமானே!

128

(128) ஒலித்து அதிர்கின்ற இந்தப் பொங்குகின்ற கரிய கடல் ஒன்றினாலும்

கோபித்து மிகச் சிவந்து, (அங்கி..) நெருப்புத் தன்மையைப் பூண்டு, உதித்தெழுந்துள்ள நிலவினாலும்.

ஒப்பற்ற கரும்பு வில்லை ஏந்தி (மன்மதன்) செலுத்தின அம்புகளாலும்

வாட்டமடைந்த தனித்த ஒருத்தியாம் தலைவியாகிய இவள் (எய்த்த) இளைப்புற்று இங்கு உடல் சோர்வு அடையலாமா!

தினைப்புனத்தினைப் பண்டு காத்த மடந்தை கேள்வா
திருத்தணிப்பதிக் குன்றின் மேல் திகழ் கந்தவேளே
பனைக்கரக் கயத்(து) அண்டர் போற்றிய மங்கைபாகா

படைத்து அளித்(து) அழிக்கும் த்ரிமூர்த்திகள் தம்பிரானே

---

29 லதாங்கி (2½) 129 (ஸ) 1+1½

கிறிமொழிக் கிருதரைப், பொறி வழிச் செறிஞரை,
கெடு பிறப்(பு) அற விழிக் கிற பார்வை
கெடு மடக் குருடரைத் திருடரைச் சமய தர்க்
கிகள் தமைச் செறிதல் உற்று அறிவு ஏதும்
அறிதல் அற்று, அயர்தல் உற்று, அவிழ்தல் அற்று அருகல் உற்று
அறவு நெக்(கு) அழிந் கருக் கடலூடே

அமிழ்தல் அற்று, எழுதல் உற்று, உணர்(வு) நலத்(து) உயர்தல் உற்று
அடி இணைக்(கு) அணுகிடப் பெறுவேனோ

பொறி உடைச் செழியன், வெப்(பு) நழி தரப், பறிதலை
பொறி இல் அச் சமணர் அத் தனைபேரும்

பொடி படச், சிவமணப் பொடி பரப்பிய, திருப்
புகலியிற் கவுணியப் புலவோனே:

தினைப்புனத்தினை முன்பு காவல் செய்த மங்கை வள்ளியின் கணவனே
திருத்தணிப்பதி மலையின் மேல் விளங்கும் கந்தவேளே.
பனைமரம் போன்ற துதிக்கையையுடைய வெள்ளையானையை
உடைய தேவர்கள் போற்றி வளர்த்த மங்கை தேவசேனை
யின் கணவனே!
படைத்து, அளித்து, அழிக்கின்ற மும்மூர்த்திகளின் தலைவ(னே)

129

(129) பொய் மொழி பேசும், (கிருதரை) செருக்கு உள்ளவர்களை,
ஐம்புலன்களின் வழியே செல்பவர்களை; கெட்ட இப்பிறப்பு
நற்பிறப்பு ஆகாமல் தொலையுமாறு விழிக்கின்ற பார்வையையுடைய
கெட்ட அறிவில்லாத குருடர்களை, திருடர்களை, சமய வாதிகளை
(நான்) நெருங்குதலுற்று; அறிவு சற்றும்
அறிதல் இல்லாமல், தளர்ச்சி உற்று, (நெஞ்சம் பக்தியால்)
நெகிழ்தல் இல்லாமல், குறைபாடு அடைந்து, (அறவும் நெக்கு)
மிகவும் கெட்டு, அழிவு தரும் பிறவிக் கடலுள்ளே
அமிழ்ந்து போதல் அற்று, மேல் எழுதலையடைந்து, நல்லுணர்வு
பெறும் நயமான வழியில் மேம்பாடு அடைந்து, இரு திருவடி
களைச் சேரப் பெறுவேனோ.

அறிவுள்ள பாண்டியனுடைய, வெப்பு நோய் நீங்கவும், தலை
மயிரைப் பறிப்பவரும், அறிவில்லாதவருமாகிய அந்தச்
சமணர்கள் அத்தனை பேர்களும்
அழியவும், சிவமணம் கமழும் திருநீற்றைப் பரவச் செய்த
சீகாழியில் தோன்றிய கவுணியர் குடியில் வந்த புலவனே!

1 தரிவனத்(து) உற, நகைப் பொறி எழப் புரம் எரித்
தவர் திருப் புதல்வ; நற் கனமேவும்

தணி மணக் குவளை நித்தமு மலர் தரு, செருத்
தணியினிற் சரவணப் பெருமாளே

130

2) நாதநாமக்ரியா (7½) (-) 1½+2+4

கொந்து வார் குரவு அடியினும்; அடியவர்
சிந்தை வாரிஜ நடுவினும், நெறிபல
கொண்ட வேத நன் முடியினும் மருவிய குருநாதா

கொங்கில் ஏர் தரு பழநியில் அறுமுக,
செந்தில் காவல, தணிகையில் இணையிலி,
கொந்து கா என மொழிதர வரு சமய விரோத;

தந்த்ர வாதிகள் பெற அரியது, பிறர்
சந்தியாதது, தனது என வரும் ஒரு
சம்ப்ரதாயமும் இது என உரை செய்து விரைநீப

சஞ்சரீ கரி கரம் முரல், தமனிய
கிண்கிணீ முக இத பதயுகமலர்
தந்த பேரருள் கனவிலும் நனவிலும் மறவேனே (ம)

தறிபடுதல் கூடும்படி - அறுபட்டு அழிவு உண்டாகும்படி - புன்சிரிப்பினின்றும் நெருப்புப் பொறியை எழுப்பி, முப்புரத்தை எரித்த சிவபெருமானுடைய திருக்குமாரனே; சிறந்த கனியும் உன்ன ஒப்பற்ற நறுமணம் வீசும் குவளை, மலர். நாள்தோறும் மலரைத் தருகின்ற திருத்தணியிற் சரவணப் பெருமானே.

130

(130) (கொந்து = பூங்கொத்து; வார் = நீளம்) வாரிஜம்: வாரி= தண்ணீர் ஜம் = பிறப்பது; தாமரை). பூங்கொத்துகளுடன் நீண்டுள்ள குராமரத்து அடியிலும், அடியார்களுடைய இதய தாமரையின் நடுவிலும், துறைகள் பல கொண்ட வேதத்தின் சிறந்த உச்சியிலும் விளங்குகின்ற குருநாதனே!

கொங்கு நாட்டில் உள்ள அழகு பெற்ற பழநியில் ஆறுமுகனே! திருச்செந்தூரில் தேவசேனாபதியே! தணிகையில் இனியில் யாதவனே! ஒன்றோடொன்று கொத்திக் கா எனக் கூவும் (காக்கைகள் போல) ஒருவரோடொருவர் எதிர்த்துப் பேசும்படி வருகின்ற சமய மாறுபாடு கொண்ட

தந்திர மிக்க வாக்கு வாதத்தினர் பெறுதற்கு அரிதான்தும், பிறர் எவராலும் சந்திக்க முடியாததும், தனக்கே உரியதாகிய ஒப்பற்ற பரம்பரையாக வரும் பொருள் இது என்று உபதேசித்து, (விரை நீப) நறுமணமுள்ள கடப்ப மலர் மாலை புனைந்ததும்,

வண்டுகள் இசை பாடுகின்றதும் (தமனிய) பொன்னாலாய கிண்கிணிகளைத் தரித்திருப்பதும், இதத்தைச் செய்வதுமாகிய இரு திருவடித் தாமரைகளைத் தந்த பேரருளைக் கனவிலும், நனவிலும் மறவேன்.

சிந்து, ஆரமும், இதழியும், இளநவ
சந்த்ர ரேகையும் அரவமும் அணிதரு
செஞ்சடாதரர் திருமகவு என வரு முருகோனே;

செண்பக அடவியினும், இதணினும், உயர்
சந்தன அடவியினும், உறை குறமகள்
செம்பொன் நூபுர கமலமும் வளையணி புதுவேயும்

இந்து வாண்முக வனசமு, மிருகமத
குங்குமாசல யுகளமு, மதுரித
இந்தள அம்ருத வசனமு முறுவலும் அபிராம

இந்த்ர கோபமும், மரகத வடிவமும்,
இந்த்ர சாபமும், இரு குழையொடு பொரு
இந்த்ர நீலமும் மடவிடை எழுதிய பெருமாளே (மு)

சிந்து: நீர்; ஆரம்: ஆத்தி மலர்; இதழி: கொன்றை;

(பொ) சிந்து வாரம்: நோக்கிப் பூ; நீரையும், ஆத்தி மலரையும், கொன்றை மலரையும், இளமையும், புதுமையும் உடைய பிறைச்சந்திரனையும் பாம்பையும் தரித்துள்ள சிவந்த சடையையுடைய சிவபெருமானுடைய அழகிய குழந்தை என அவதரித்த குருகோனே!

செண்பகக் காட்டிலும், பரண் மீதும், உயர்ந்த சந்தனக் காட்டிலும் வாசம் செய்யும், வள்ளி பிராட்டியின், செம்பொன்னாலாய சிலம்பணிந்த மலரடிகளையும், வளையல்கள் அணிந்த புது மூங்கில் அனைய தோள்களையும்

சந்திரனை ஒத்த ஒளி வீசும் முகமென்னும் தாமரையையும் கஸ்தூரி குங்குமம் இவையணிந்த மலையன்ன இரண்டு கொங்கைகளையும், இனிமை இன்பம் தருவதான பண் இந்தளம் (நாதநாமக்கிரியை) போன்ற அமிர்த மொழிகளையும், இள நகையும், அழகிய

தம்பலப் பூச்சி போன்ற சிவந்த வாயிதழ்களையும், மரகதம் போன்ற பச்சை வடிவத்தையும், (இந்த்ர வில்) வான வில் போன்ற புருவங்களையும், இரண்டு காதணியாம் குழைகளைத் தாக்குகின்ற நீலோத்பல மலர் போன்ற கண்களையும். மடலின் கண் எழுதிய பெருமாளே.

(31) ஆபோகி (அட) (ரு) (ரூ+)

நினைத்தவர் முடிக்கும், பகைத்தவர் குடிக்கும்,
செகுத்தவர் உயிர்க்கும், சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பு என்று அறிவோம் யாம்
நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும்
நிசிக்கரு அறுக்கும் பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்
* நிறைப்புகழ் உரைக்கும் செயல்தாராய்

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்தித்
தகுத்தகு தகுத தந் தன பேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத் துடி முழக்கும்
தளத்துடன் நடக்கும் கொடுசூரர்
சினத்தையும் உடற் சங்கரித்த மலை முற்றும்
சிரித்(து) எரி கொளுத்தும் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்து எண்
திருத்தணி இருக்கும் பெருமாளே

* [நிறைப்புகழ்: (விளக்கம்) பக்கம் 66]

132

(32) சாமா ஆதி ம ஆதி

சினத் திவத் தின சிறு மணல் அள(வு) உடல்
செறித்த(து) எத்தனை, சில கடலினில் உயிர்
செனித்த(து) எத்தனை, திரள் கயல் என அது போதா

முருகனடியார்களை கோபித்தவர்களுடைய தலைக்கும், அவர்களோடு பகை பூண்டவர்களுடைய குடும்பத்திற்கும்; அவர்களைக் கொல்பவர்களுடைய உயிர்க்கும், கோபத்துடன் (நோக்கி) சிரிப்பவர்க்கும், பழிப்பவர்க்கும் திருப்புகழ் பெரு நெருப்பாக நின்று அழித்து விடும் என்பதை யாம் அறிந்திருக்கின்றோம் (முருகன் திருப்புகழ்) அடியார் கருதினதைத் தரும்; மனத்தை உருக்கும்; திரண்ட கருவை அறுக்கும் இனிப் பிறவாத வாறு.

நெருப்பையும் எரித்தழிக்கும், மலையையும் பொடிபடுத்தும். (ஆதலால்) எல்லாப் பொருள்களும் நிறைந்த திருப்புகழைப் பாடுகின்ற நற்செயலைத் தந்தருள்வீர்.

"தனத்தன தனத்தந் திமித்திமி திமித்தித் தகுத்தகு தகுத் தந்தன" என்று பேரிகைகள் முழங்கவும்

தடுட்டுடு டுடுட்டுண்டு என் உடுக்கைகள் முழங்கவும். சேனைகளுடன் போர்க்களத்திற்கு வந்த கொடிய சூராதியவுணர்களது கோபத்தையும், துணித்த பிணமலைகள் யாவையும்; சிரிப்பினால் எரி கொளுத்திச் சாம்பலாக்கிய ஒளி வேலனே!

தினை விளைந்த மலையில் வாசஞ் செய்த குறப்பெண் வள்ளியின் கொங்கையில் சுகித்து (யாவரும்) மதிக்கும் திருத்தணியில் வீற்றிருக்கும் பெருமானே.

---

(132) சின்ன எள்ளு, தினை, சிறுமணல் இவைகளின் அளவுள்ள உடல்களில் பொருந்தின (பிறவி) எத்தனை! முழங்கும் கடலில் உயிர் பெற்று வாழ்ந்த (பிறவி) எத்தனை, திரண்ட கயல் மீன் எனப் பல வகையானவாய்! அது போதாமல்

செமித்தது எத்தனை மல சனை, உலகிடை
செழித்தது எத்தனை, சிறு தன மயல் கொடு
செடத்தில் எத்தனை, நமன் உயிர் பறிகொள்வ(து) அளவேதோ

மனத்தில் எத்தனை நினைவுகள், குடி
கெடுத்தது எத்தனை, மிருகமதென உயிர்
வதைத்தது எத்தனை, அளவில, விதி கரம் தழியாமல்
வகுத்தது எத்தனை, மசகனை முருடனை
மடைக்குவத்தனை மதி அழி விரகனை
மலர்ப்பதத்தினில் உருகவும் இனி அருள் புரிவாயே (மு)

தனத் தனத்தன தனதன தன
திமித் திமித்திமி திமி திமி திமி
தகுத் தகுத் தகு தகுதகு தகு தகு தகு தீதோ
தரித் தரித் தரி தரிரிரி ரிரிரிரி
தடுட் டுடுட்டுடு டுடுடு டுடுடுடு
தமித்த மத்தள தமருக விகு(து)தவி கடல் போலச்
சினத்(து) அமர்கள(ம்) செரு திகழ் குருதி அது
கிமிழ்த்திடக் கரி அசுரர்கள் பரி சிலை
தெறித்திடக் கழு நரி தி(ன்)ன நிண மிசை பொரும் வேலா
செழிக்கும் உத்தம சிவ சரணர்கள் தவ
முநிக் கணத்தவர் மதுமலர் கொடு பணி
திருத்தணிப் பதி மருவிய குறமகள் பெருமாளே

(செனிமித்த) பிறந்த பிறப்பு எத்தனை, மலையிலும் சுனையிலும்! உலகில் (பிறந்து) செழிப்புற்ற (பிறவி) எத்தனை! அற்பமான கொங்கை மீது மயல் கொண்டு உடம்பெடுத்தது எத்தனை! (இவ்வாறு தோன்றி) யமன் உயிர் பறித்துப் போவதற்கு ஒரு அளவு உண்டோ!

மனத்தில் எத்தனை எண்ணங்கள் வஞ்சகமானவை; குடி கெடுத்தது எத்தனை; மிருகம் போலப் பிற உயிர்களை வதைத்தது எத்தனை! இதற்கெல்லாம் அளவே இல்லை; விதியின் போக்குத் தவறாமல் உண்டான நிகழ்ச்சி எத்தனை (இங்ஙனம் எல்லாம் தோன்றி இளைத்த இந்த) கொசுவுக்குச் சமானமானவனை, பிடிவாதமுடையவனை, அறிவற்ற குலத்தில் பிறந்தவனை, அறிவு அழிந்த வஞ்சகனை, உனது மலரடியில் உருகும்படி இனி அருள் புரிவாயாக.

தனத்தன ---- தகு தீதோ

தரிததரி ---- டெடுடு (என்று)

தனித் தொலிக்கும் மத்தளம், உடுக்கை இவைகளின் வெற்றி ஒலி கடல் போல முழங்க,

கோபமிக்க போர்க்களத்தில், போர் மிகுதியாக (அதனால்) ரத்தம் பெருகித் தோய்ந்திடவும், யானைகளும், அசுரர்களும், குதிரைகளும், விற்களும், குலைந்து முறிபட, கழுகும், நரியும் தின்ன மாமிசங்கள் மீதிருந்து சண்டை செய்த வேலனே!

செழிப்புள்ள, உத்தம குணத்தரான சிவனடியார்களும், தவ முனிவர் கூட்டத்தினரும், தேன் நிறைந்த மலர் கொண்டு பணிகின்ற திருத்தணி பதியில் வீற்றிருக்கும், வள்ளி நாயகியின் பெருமானே

தாக்(கு) அம்ருக்கொரு சாரையை, வேறொரு
சாட்சி அறப் பசி ஆறியை, நீறு கிடு
சாஸ்த்ர வழிக்கு அதி தூரனை, வேர் விழு தவழ்ந்தும்

தாற்பர்யம் அற்று உழல் பாவியை, நாவலர்
போற்(று) பரிவுற்(று) உனையே கருதா(து); இகல்
சாற்று தமிழ்க் குரை ஞானியை நாள் வரை தடுமாறிப்

போக்கிடம் அற்ற விருதாவனை, ஞானிகள்
போற்றுதல் அற்ற துரோகியை, மாமருள்
பூத்த மலத்ரய பூரியை, நேரிய புலையேனை
போக்கி விடக் கடனே, அடியாரொடு
போய்ப் பெறுகைக்கிலையோ கதியானது
போர்ச்சுடர் வஜ்ர வை வேல் மயிலா அருள் புரிவாயே (மு)

மூக்கறை, மட்டை, மகாபல, காரணி;
சூர்ப்பநகை படு மூளி, உதாசனி,
மூர்க்க குலத்தி விபீஷணர் சோதரி முழுமோத

மூத்த அரக்கன் இராவணனோடு இயம்பு
மூட்டி விடக், கமலாலய சீதையை
மோட்டன் வனத்தொரு தேர் மிசையே கொடு முகிலே போய்

(133) தாக்கிச் செய்கின்ற போருக்கு ஒரு சாரைப்பாம்பு போன்றவனை, (சீறிப் பாய்பவன்), வேறு ஒருவரை சாட்சியாக வைத்து உண்பிக்காமல் தனியே இருந்து புசிப்பவனை, திருநீறு இடுகின்ற சைவாகம சாஸ்த்ர வழிக்கு வெகு தூரத்தில் உள்ளவனை, வேர் பாய்வது போல அழுத்தமான ஆழ்ந்த தவநெறியில் முழுகுவதற்கு (சிறிதேனும்)

நோக்கம் (கருத்து) என்பதே இல்லாமல் திரிகின்ற பாவியை, நாவல்ல புலவர்கள் போல அன்பு கொண்டு உன்னைக் கருதாமல், பகைமூட்ட வல்ல தமிழைக் குலைக்கின்ற நாயினை, நாள்தோறும் தடுமாற்றம் கொண்டவனை

வேறு எங்கும் புகலிடம் அற்ற வீணனை, ஞானிகளைப் போற்றும் குணம் இல்லாத பாதகனை. பெரிய மயக்க அறிவு நிரம்பிய மும்மலங்களுடன் கூடிய கீழ்மகனை, சரியான (முதல் தரமான) கீழ்மகனை

கைவிடுதல் நீதியோ! அடியார்களோடு போய்ப் பெறும்படியாய் இல்லையா நற்கதி! போர் செய்வதும், ஒளி வீசுகின்றதும், வயிரம் போல் திண்மை கொண்டதும், கூர்மை கொண்டதுமான வேலாயுதத்தை உடைய மயில் வாகனனே! அருள் புரிவாயாக

மூக்கு அறுபட்டவள், பயனற்றவள், மகா பலத்தை உடையவள் (போருக்கு) மூல காரணமாயிருந்தவள், சூர்ப்பநகை என்னும் பேருடையாள், மிகவும் (காது, மூக்கு முதலிய உறுப்புகள்) குறைந்தவள், கொடியவள், அவமதிக்கத் தக்கவள், மூர்க்க குலமான அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள், விபீஷணரின் சகோதரி, முழு வஞ்சகி

மூத்தவனான அரக்கன் இராவணனிடம், சீதையின் அழகு முதலியவற்றை எடுத்துக்கூறி காமத்தை மூட்டி விட, தாமரைக் கோயிலில் வாழும் இலக்குமி தேவியாம் சீதையை, அந்த மூர்க்கன் சூழ்ச்சியாகக் கவர்ந்து, ஒரு தேரின் மேல் ஏற்றிக் கொண்டு ஆகாய வழியாகச் சென்று

மாகன சித்திர கோபுர நீள் படை
வீட்டில் இருத்திய நாள் அவன் வேரற
மார்க்கம் முடித்த வில்லாளிகள் நாயகன் மருகோனே

வாச்சிய மத்தள பேரிகை போல் மறை
வாழ்த்த மலர்க்கழு நீர்தரு நீள் சுனை
வாய்த்த திருத்தணி மாமலை மேவிய பெருமானே (மு)

134

பெஹாக் (12) (4) ஆதி-திஸ்ர நடை

துபார், அப்பு, அடற் தீ, மொய்க்கால்,
சொற் பா வெளி, முக் குண, மோகம்

துற்றிய பீறல் தோலிட்டே
சுற்று மதனப் பிணி தோயும்
இப்பாவக் காயத்(து) ஆசைப்பாடு
எற்றே உலகிற் பிறவாதே
எத்தார் வித்தாரத்தே கிட்டா
எட்டா அருளைத் தரவேணும்

தப்பாமற் பாடிச் சேவிப்பார்
தத்தாம் வினையைக் களைவோனே

சிறந்த பெருமையும் அழகும் வாய்ந்த கோபுரங்கள் நீண்டுள்ள,
சேனைகளோடு கூடிய அசோக வனத்தில் சிறைப்படுத்திய போது,
அவன் (குலம்) வேர் அறும்படியான வழியை எடுத்து முடித்த வில்லா
ளிகளின் தலைவனை ராமபிரானது மருகனே!
வாத்தியங்களாம் மத்தளம் பேரிகை இவைகளின் ஒலி போல
வேதங்களைவ் வாழ்த்தவும், செங்கழுநீர் மலரைத் தருகின்ற
நீண்ட சுனை உள்ள திருத்தணி மாமலையில் வீற்றிருக்கும
பெருமாளே.

134

(134) உணவைத் தரும் மண், நீர், அசைகின்ற நெருப்பு, நெருங்கி
வீசுகின்ற காற்று, சொல்லப்படுகின்ற (புகழப்படுகின்ற)
(பா) பரந்துள்ள ஆகாயம், (பஞ்ச பூதங்கள்), சத்துவம், இராஜஸம்,
தாமஸம் எனப்படும் முக்குணங்கள், (மண், பெண், பொன்)
என்னும் மூவாசைகள்
நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளதும், கிழிந்த தோலிட்டு சுற்றி
மேயப்பட்டதும், காம நோய் தோய்ந்துள்ளதுமான
இந்தப் பாவம் நிறைந்த உடம்பின் மீது ஆசைப்படுதல் மேற்
கொண்டு உலகில் (மேலும் மேலும்) நான் பிறவாமல்
உன்னை ஏத்தாதாருடைய (பக்தி செய்யாதவர்களுடைய) கல்வி
சாமர்த்தியத்திற்கு கிட்டாததும், எட்டாததுமான (உனது)
திருவருளை (எனக்குத்) தர வேணும்
தவறாது (உன்னைப்) பாடித்தொழுபவர் யார் யாரோ அவர்க
ளுடைய வினையைப் போக்குபவனே!

தற்கு ஆழிச் தர் செற்றய், மெய்ப்
போதத்தாய் தணிகைத் தனிவேலா

அப்பாரகைப் பாலைப் போல் சொற் கா
அற் பாரவத் தனத்(து) அணைவோனே

அத்தா நித்தா முத்தா சித்தா
அப்பா குமரப் பெருமானே

— — — — — — — — — — — — —

அப்பா தணிகைப் பெருமானே! நித்தா அருளைத் தரவேணும்

135

சுபபந்து/ வராளி (16) 4-4களை ($1\frac{1}{2}+1\frac{1}{2}+1$)

நொக்(கு) அருக்குடில், அசுத்தம் ஏற்ற, சுக
துக்க மால் கடம், முமல மாயை
துற்ற கால் பதலி சொற் படாக்குதலி
துப்(பு) கிலாய் பல சமய நூலைக்;
கைக் கொளாக், கதறுகை கொள், ஆக்கை அவலப்
புலாற் தசை குருதியாலே
கட்டு கூட்(டு), அருவருப்பு வேட்(டு) உழல்
II அசட்ட வாக்(கு) அழிவது அருநாளோ

(சட்ட வாக்கு அழிவது அருநாளோ)

திருக்கும், (ஆழி) ஆக்ஞா சக்கரமும் கொண்ட சூரனை அழித்தவனே! மெய்ஞான மூர்த்தியே! தணிகையில் வீற்றிருக்கும் ஒப்பற்ற வேலனே!

அந்த சர்க்கரைப் பாகினைப் போலும், பாலையும் ஒத்த சொற்களையும் - தினை காவலையும் உடைய பெண் வள்ளி நாயகியின் தனத்தை அணைந்தவனே!

உயர்ந்தோனே! என்றும் அழியாதவனே! சித்த மூர்த்தியே! அப்பா குமரப் பெருமானே.

135

(135) தோல் நீங்காத குடிசை; அசுத்தத்தை ஏற்றதும், இன்ப துன்பங்களும் மயக்கமும் நிறைந்த குடம்; மும்மலங்களும், மாயையும்

நெருங்க வைத்த. காற்று நிறைந்த பானை, சொல் விளங்கப் பெறாத மழலைச் சொல் போன்ற, அறிவுக்குப் பொருந்தாத பலசமய நூல்களை

கைக் கொண்டு, கதறிப் பேசுவதை மேற் கொண்ட. உடம்பு, துன்பத்திற்கு இடமாம் மாமிசம். தசை. உதிரம் இவற்றால்

கட்டப்பட்ட கலப்பு, வெறுக்கத் தக்கதான இந்த உடம்பை விரும்பித் திரிகின்ற, (அசட்டு) கீழ் மகனாகிய எனக்கு வாக்கு அற்ற மௌன நிலையைப் பெறுவது ஒரு நாள் உண்டாகுமோ

(நன்கு வாக்கு அழியவும் (மவுன நிலை கூடவும்) ஒரு நாள் கிடைக்குமா!

5 அக்கு அராப் பொழயின் மெய்க்(கு) இடாக்குரவர்
அர்ச்சியாத் தொழு மு நிவ்றைய
அய்ய, போர்ப் பனிரு வெற்ப, பூத தணியல்
வெற்ப, பார்பதி, நதி, குமாரா

இக்கண் நோக்(கு) உறில் நிருத்த நோக்கு உறு த
I வத்திரோர்க் (கு) உதவும் இளையோனே

எத்திடார்க்கு அரிய முத்த, பாத்தமிழ் கொடு
எத்திரைர்க்கு எளிய பெருமானே

---

6 செஞ்சுருட்டி / ஜஹான (6½) 136 (ப). (1+½)+(½+1)+1½

நிலையாத சமுத்திரமான சமுசாரத் துறைகளின் முழ்கி
நிசம் ஆனது எனப் பல பேசி அதன் ஊடே
நெடு நாளும் உழைப்(பு) உளது ஆகி பெரியோர்கள் கிடைக்கரவாகி
நினைவால் நின் அடித்தொழில் பேணி. துதியாமல்

தலை ஆன உடற் பிணி ஊறி, பவ நோயின் அலைப் பல ஏகி
சஞ்ஞான பயித்தியமாகித தடுமாறி.

தவியாமல், பிறப்பையு நாடி, அது வேரை அறுத்(து), உன் நதி
தலமீதில் பிழைத்திட வே நின் அருள்தாராய்

உருத்திராட்சம், பாம்பு, திருநீறு இவை தம்மை உடம்பில் அணிந்
துள்ள பெரியரவம் சிவபிரான் அர்ச்சித்துத் தொழுத ஞானியாம்
அப்பனே! போருக்குரிய மலை போன்ற பன்னிரண்டு தோள்கள்
உடையவனே! குவளை மலர் மலர்கின்ற தணிகை மலை வாழ்வே!
பார்வதிக்கும். கங்கை நதிக்கும் குமாரனே!

இந்தப் பூமியில் நோக்கம் என்பது இருந்தால், அது உன்னுடைய
நடனத்தை நோக்கும் நோக்கு ஒன்றே; அத்தகைய நோக்கு
ஒன்றையே கொண்ட தவசீலர்களுக்கு உதவும் இளையோனே!

உன்னை ஏத்தித் துதி செய்வார்வதற்கு அரியவனே!, முத்தனே
(பாசங்களில் நீங்கியவனே); தமிழ்ப் பாடலைக் கொண்டு ஏத்தித்
துதி செய்பவருக்கு எளிய பெருமானே.

136

(136) நிலை காண (ஆழமும் அகலமும் இவ்வளவு என்று சொல்ல) முடியாத
சமுத்திரம் இது என்று சொல்லத் தக்க சமுசாரம் என்கின்ற நீர்த்
துறையில் மூழ்கி, மெய் போன்ற பல பொய்களைப் பேசி, அத்தகைய வாழ்வி
பலநாள் உழைப்பு உள்ளதாகி (உழைத்து) பெரியோர்கள் கூட்டத்தில்
திருட்டுத் தனமுடன் ஒளிவுடையவனாகி, (உண்மை) நினைப்புடனே
உனது திருவடித் தொண்டுகளை விரும்பித் துதியாமலும்,

மென்மையான உடல், நோய்களில் ஊறி, பிறவி நோய் என்கின்ற
அலைச்சல் பலவற்றையும் அநுபவித்து, கோபம் கொண்ட பயித்தியக்
காரனாகித் தடுமாற்றம் கொண்டு

தவியாமலும், பிறப்பு ஏன் வந்தது என அதன் மேல காரணத்தை ஆய்ந்
அந்தப் பிறப்பின் வேரை (வேராகிய ஆசையை) அறுத்து, உன்னைப் புகழ்ந்து நீ
இப்பூமியில் நான் பிழைத்து வாழுமாறு, உனது திருவடிகளைத் தந்தருளுக.

கலியாண சுபுத்திரன் ஆக
குறமாது தனக்கு விநோத
கவின் ஆறு புயத்தில் உலாவி ... விளையாடி
கனி கூரும் உனைத் துணை தேடும்
அடியேனை சுகப்படவே வை
கடன் ஆகும் இதுக் கணம் ஆகும் ... முருகோனே
பல காலும் உனைத் தொழுவோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படி மீது துதித்(து) உடன் வாழ ... அருள் வேளே
பதியான திருத்தணி மேவு
சிவலோகம் எனப் பரி(வு) உறு
பவரோக வயித்திய நாதப் ... பெருமானே.

37) சிந்து பைரவி (8) (ம) /500 137

நினைத்தது எத்தனையில் ... தவறாமல்
நிலைத்த புத்திதனைப் ... பிரியாமல்
கனத்த தத்துவம் உற்(று) ... அழியாமல்
கதித்த நித்திய சித்து ... அருள்வாயே
மனித்தர் பத்தர் தமக்கு ... எளியோனே
மதித்த முத்தமிழிற் ... பெரியோனே
செனித்த புத்திரரிற் ... சிறியோனே
திருத்தணிப் பதியிற் ... பெருமானே

கலியாண மாப்பிள்ளையாக, குறமாது வள்ளிக்கு அற்புதமாய் வாய்த்து, அவளுடைய அழகு நிறைந்த புயங்களை அணைத்துத் திளைத்து விளையாடி.

மகிழ்ச்சி கொள்ளும் உன்னை (எனக்கு உற்ற) துணையாகத் தேடுகின்ற அடியேனைச் சுகப்படுமாறு வைத்தருள்வீர்! இது உனக்குக் கடமையாகும், இது பெருமையும் ஆகும் முருகோனே!

பல முறையும் உன்னைத் தொழுபவர்கள், மறவாது உனது திருப் புகழையே கூறி, இப்பூமியில் உன்னைத் துதி செய்திருந்து வாழ்வதற்கு அருளும் செய்வேனோ!

தலமான (உனது) திருத்தணி, (யாவரும்) விரும்பும் சிவலோகமே ஆகும் என்று, அத்தலத்தின் மீது ஆசை கொள்ளும் பெருமானே! பிறவிப் பெரும் பிணியைப் போக்கவல்ல வயித்திய நாதப் பெருமானே!

137

(137) நினைத்தது எந்த அளவும் தவறாமல் இருக்கவும் (நினைத்தவை எல்லாம் நினைத்தபடியே கைகூடவும்)

நிலையான ஞானத்தை விட்டு நான் விலகாமல் இருக்கவும்

பெருமை வாய்ந்த (முப்பத்தாறு) தத்துவங்களையும் கடந்த நிலையை உற்று அதனால் அழிவிலாது

தோன்றக் கூடிய சாசுவதமான அறிவை அருள்வாயே

மனிதர்களுள் பத்தர்களுக்கு எளியவனே

மதிக்கப்படுகின்ற முத்தமிழ் (அறிவிற்) பெரியவனே!

தோன்றிய சிவ குமாரர்களுள் சிறியவனே!

திருத்தணிப் பதியிற் பெருமானே!

9

(8) <u>தந்யாதி</u> <u>(3½)</u> 138 (ம) <u>(½+2)</u>

பகல் இராவினும் கருவியால் அனம்
பருகி ஆவி கொண்டு உடல் பேணி

பழைய வேதமும் புதிய நூல்களும்
பல புராணமும் சிவ ஆதி

<u>அகல நீனம் என்று அளவு கூற அரும்</u>
<u>பெருளிலே அமைந்து</u> <u>அடைவோரை</u>

<u>அசடர் மூகர் என்று அவமே மொழிந்(து)</u>
<u>அறிவிலேன் அழிந்</u> <u>திடலாமோ</u>

சகல லோகமும் புகல நாடொறும்
சுற்(கு) இலாத செங் கழுநீரும்

தளவு நீபமும் புனைபு மார்ப தென்
தணிகை மேவு செங் கதிர் வேலா

சித்ர பூதரம் தகர, நான்முகன்
சிறுகு வாசவன் சிறை மீளத் -

திமிர சாகரம் கதற, மாமரம்
சிதற வேல் விடும் பெருமாளே

---

(39) <u>ஹம்ஸாநந்தி</u> <u>(24)</u> 139 (+) <u>ஆதி-திஸ்ர நடை. உகளா</u>

பருத்த பற் சிரத்தினைக் குருத் திறற் கரத்தினைப்
பரித்த அப் பதத்தினைப் பரிவோடே

(138) பகலிலும் இரவிலும் (உடல் என்னும்) கருவியால் அன்னம் (பருகி) உண்டு, (ஆவி கொண்டு) உயிரை ஓம்பி, உடலை விரும்பி வளர்த்து

பழைய வேத நூல்களையும், புதிய (நல்ல) நூல்களையும், பல வகையான புராணங்களையும் ஒரு வாறு சிலவற்றை ஓதி உணர்ந்து

அகலம், நீளம் என்று ஓர் அளவு சொல்லுதற்கு இயலாத (பேரின்பப்) பொருளில் (மனம்) வைத்து (அப் பொருளை) அடைய வல்லோரை

அசடர் என்றும், ஊமையர் என்றும், வீண்பேச்சுக்களைப் பேசி அறிவிலியாகிய நான் அழிந்து போகலாமா!

எல்லா உலகங்களும் புகழும்படி, நாள் தோறும் தவறுதல் இன்றி செங்கழுநீர் மலரும்

முல்லை மலரும், கடப்ப மலரும் அணிகின்ற திரு மார்பனே! அழகிய தணிகையில் வீற்றிருக்கும் செவ்விய ஒளியுடைய வேலாயுதரே!

சிகரங்களை உடைய கிரௌஞ்ச மலை பொடியாகவும், பிரமனும், (தன் உயர்ந்த நிலையிலிருந்து) தாழ்வு பட்ட இந்திரனும், சிறையினின்று மீட்சி பெறவும்

இருண்ட கடல் கதறி ஒலிக்கவும், மாமரமான சூரன் சிதறுண்டு பிளவு படவும் வேலாயுதத்தைச் செலுத்தின பெருமானே!

139

(139) பருத்த பல்லோடு கூடிய தலையையும், நிறமும் வலிமையும் கொண்ட கைகளையும், (உடம்பைத்) தாங்குகின்ற அந்த கால்களையும், அன்புடனே

படைத்த பொய்க் குடத்தினைப் பழிப் பவத்(து) இடத்தினைப்
பசிக் குடற் கடத்தினைப் பயமேவும்

பெருத்த பித்(து) உருத்தனைக் கிருத்திமத் தருத்தியைப்
பிணித்த முக்குற்(ற)றத்தொடு ஐ புலனையும்

பிணித்த இப்பிணிப் பையைப் பொறுத்(து) அமிழ் பிறப்பு அற
குறிக் கருத்(து) எனக்(கு) அளித்து அருள்வாயே

கருத்தில் உற்று உரைத்த பத்தரைத், தொறுத் திருக்கரைக்
கழித்த, மெய்ப் பதத்தில் வைத் திருவீரா

கதித்த நற் தினைப்புனக் கதித்த நற் குறத்தியைக்
கதித்த நற் திருப்புயத்(து) அணைவோனே

செருத் தெறித்(து) எதிர்த்த முப்புரத்(து) உறத்து அரக்கரை
சிரித்(து) எரித்த நித்தர் பெற் குமரேசா

சிறப்(பு) உறப் பிரித்(து), அறத் திறத் தமிழ்க்(கு) உயர்த்திசைச்
சிறப்புடைத் திருத்தணிப் பெருமானே

கொண்ட பொய்யான குடமாம்(உடலை), பழிக்கும் பாவத்துக்கும் இடமாம்(உடலை), பசிக்கு இருப்பிடமாய் குடலோடு கூடிய உடலை பயத்தோடு கூடிய

பெரிய பித்த உருவத்தை, தோலாலாய உலை உனது கருவியை பொருத்தப்பட்டுள்ள (காமம், வெகுளி, மயக்கம் என்னும்) முக்குற்றங்களோடும், (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) என்னும் ஐம்புலன்களோடும்

கட்டுப்பட்ட இந்த நோய்ப்பையைத், தாக்குவதும் ஆழ்த்துவதுமான பிறப்பை ஒழிக்கும் குறியை (நோக்கத்தைக்) கொண்ட கருத்தை எனக்கு அளித்து அருள்வாயே!

கருத்தில் வைத்து (உன்னைப்) புகழ்ந்த அடியார்களை, நிரம்ப வஞ்சகமுடையவர்களை ஒதுக்கித் தள்ளுகின்ற (உனது) மெய்ப் பதத்தில் சேர்த்துக் கொள்ளும் வீரனே!

(தினை) மிகுந்த நல்ல தினைப்புனத்தில், இருந்த நல்ல குறத்தியை உயர்ந்த நல்ல திருப்புயத்தில் அணைந்தவனே!

போரில் குவிந்து வந்து எதிர்த்த, முப்புரத்து வலிய அரக்கர்களை புன்னகை புரிந்து எரித்து நீறாக்கிய, ஆதி என்றும் உள்ள சிவ பெருமானுடைய அழகிய குமரேசனே!

சிறப்பு ஏற்படும்படி, தனிநின்று மேம்பட்டு, அறநெறியை இனிது கூறும், தமிழின் (எல்லையில்) உயர்ந்த (வட) திசையிலிருக்கும் சிறப்பைப் பெற்றுள்ள திருத்தணிப் பெருமானே.

53 (140) 140

த்விஜாவந்தி / ரஞ்சனி (12) (ஸ) ஆதி-திஸ்ர நடை

பொற பதத்தினைத் துதித்து நற் பதத்தில் உற்ற பத்தர்
பொற்(பு) உரைத்து நெக்(கு) உருக்க அறியாதே
புத்தகப் பிதற்றை விட்டு வித்தகத்(து) உனைத் துதிக்க
புத்தியில் கலக்கம் அற்று நினையாதே;
முற் படத் தலத்(து) உதித்து, பிற் படைத்(த) அகிர்த்ய முற்றி
முற் கடைத் தவித்து நித்தம் உழல்வேனை

முட்ட இக் கடைப் பிறப்பினுள் கிடப்பதைத் தவிர்த்து
முத்தி சற்று எனக்(கு) அளிப்பது ஒரு நாளே

வெற்(பு) அனித்த தற்பரைக்(கு) இப்புறத்தை உற்(று) அளித்த
வித்த(க) அத்தர் பெற்ற கொற்ற மயில் வீரா

வித்தை தத்வ முத்தமிழ்ச் சொல் அத்த(ம்) சத்தம் வித்தரிக்கும்
மெய்த் திருத்தணிப் பொருப்பில் உறைவோனே

கற்பகப் புனக் குறத்தி கச்(சு) அடர்த்த சித்ரம் உற்ற
கற்புரத் திருத் தனத்தில் அணைவோனே

கைத்(து) அரக்கர் கொத்து உகச் சினத்து வஜ்ரனுக்(கு) அமைத்த
கைத் தொழுத் தறித்து விட்ட பெருமானே!

(140) அழகிய (உனது) பாதங்களைத் துதித்து. மேலான பதவியை அடைந்த பத்தர்களுடைய, பெருமையை எடுத்துரைத்து. உள்ளம் நெகிழ்ந்து உருக அறியாமலும்

புத்தகங்களைக் கற்றுப் பிதற்றுதலை விட்டு, ஆசைத்தால் உன்னைத் துதி செய்ய, கலக்கம் இல்லாத புத்தியுடன் உன்னை நினையாமலும்

மண்பட்டுப் பூமியில் பிறந்து, பின்னர் நான் செய்யும் அக்கிரமமான செயல்கள் நிரம்பி. பிறருடைய முன் வாசல்களில் நின்று தவித்து தினந்தோறும் அலைகின்ற என்னை

அடியோடு இந்த இழிவான பிறப்பினுள் விழுந்து கிடப்பதை மாற்றி மோட்ச இன்பத்தை சற்று எனக்கு (நீ) அளித்தருளும் ஒரு நன்னாள் கிடைக்குமா?

இமயமலை (அரசன்) போற்றி வளர்த்த, உமாதேவிக்கு இடது பாகத்தை அன்பு பொருந்தி அளித்த. ஞான முதல்வராகிய சிவபெருமான் பெற்ற, வெற்றி மயில் வீரனே!

கல்வியும், உண்மையும், மூன்று தமிழின் சொல்லும், பொருளும், ஆசைகளுடன் நீடித்திருக்கின்ற, மெய்ம்மை விளங்கும் திருத்தணி மலையில் உறைபவனே!

கற்பக மரம் போன்ற தருக்கள் நிறைந்த தினைப்புனத்தில் வாழ்ந்த, வள்ளி பிராட்டியின் கச்சு நெருங்கிய அழகிய, பச்சை கர்ப்பூரம் அணிந்துள்ள அழகிய தனங்களில் அணைபவனே!

வெறுப்பு கொண்ட அரக்கர்களின் கூட்டம் அழியுமாறு கோபித்து, வச்சிராயுதத்தை உடைய இந்திரனுக்கு அவர்கள் இட்ட கை விலங்கை முறித்து எறிந்த பெருமானே.

55
(144)

மோகனம் (17) 141 (ப) 15150 15

முத்துத் தெறிக்க வளர் இக்குச் சிலைக்கை மதன்
முட்டத் தொடுத்த மலராலே

மூத்தத் திருச் சுருதி முற்றத்து உதித் தி என
முற்பட்டு எறிக்கு நிலவாலே

ஏத் தத்தையர்க்கும் இத மிக்கு பெருக்கம் அணி
இப்பொற் கொடிச்சி தளராதே

எத் திக்கும் உற்ற புகழ் வெற்றித் திருத்தணியில்
இற்றைத் தினத்தில் வரவேணும்

மெத்தச் சினத்து வட திக்குக் குலச் சிகர
வெற்பைத் தொளைத்த கதிர்வேலா

மெச்சிக் குறத்தி தனம் இச்சித்(து) அணைத்(து) உருகி
மிக்குப் பணைத்த மணிமார்பா

மத்த ப்ரமத்தர், அணி மத்தச் சடைப் பரமர்
சித்தத்தில் வைத்த கழலோனே

வட்டத் திரைக் கடலில் மட்டித்து எதிர்த்தவரை
வெட்டித் துணித்த பெருமானே.

(141) (தனக்குள்ளே இருக்கும்) முத்து வெளியே தெறித்து விழும்படி
யாக முற்றி வளர்ந்துள்ள கரும்பை, வில்லாகக் கையிற் கொண்ட
மன்மதன், அடியோடு (நன்றாகச்) செலுத்தின மலரம்புகளாலும்
முத்துக்களையுடைய அழகிய கடலின், பரப்பிலே உதிக்கின்ற தீ
(நெருப்பு) போன்று எதிர்பட்டு வீசும் நிலவாலும்,

கிளி போல் பேசும் எந்தப் பெண்களும், அவர் (வசை) கூறுவதால்
துன்பம் பெருகி, அத்துன்பத்தை அணிகின்ற, இப் பொற் கொடி
போன்ற நாயகி, தளர்ச்சியுறாத வண்ணம்

எல்லாத் திசைகளிலும் புகழ் பரந்துள்ள, வெற்றி விளங்கும்
திருத்தணியில் இன்றைய தினத்தில் வந்தருள வேண்டும்

மிகுதியாகக் கோபித்து, வட திசையில் இருந்த சிறந்த சிக
ரங்களைக் கொண்டிருந்த கிரௌஞ்ச மலையைத் தொளைத்து
பொடியாக்கிய ஒளியுடைய வேலாயுதனே!

மெச்சிப் புகழ்ந்து, வள்ளி நாயகியின் தனங்களை விரும்பி
அவளை அணைத்து உருகி, மிகவும் பெருமையை அடைந்த
அழகிய மார்பனே.

மிகுந்த பித்தரான, அழகிய ஊமத்தம்பூவைச் சூடிய சடைப்
பரமர், தமது உள்ளத்தில் வைத்துப் போற்றிய திருவடிகளை
உடையவனே!

வட்ட வடிவுள்ள அலைகள் வீசும் கடலில் (அசுரர்களை)
முறித்து அழித்து, எதிர்த்து நின்றவரை வெட்டித் துண்டாக்கிய
பெருமானே.

21
(142) ரஞ்சனி (16) 142 14·4களை (ல) ½+½+1

வட்ட வாள்(ட்) தனை மானேச்சி, பாற குதலை
மக்கள், தாய்க் கிழவி பதி நாடு
வைத்த தோட்ட(ம்) மனை அத்தம் ஈட்டு பொருள்
மற்ற கூட்டம் அறிவு அயலாக
முட்ட ஓட்டி மிக எட்டு மோட்டெருமை
முட்டர் பூட்டி என அழையாமுன்

முத்தி வீட்(டு) அணுக முத்தராக்க, சுருதிக்
குராக் கொளிரு கழல் தாராய்

பட்ட நாற் பெரு மருப்பி(ன்) நாற்கர இ
பத்தின் வாட்(ள்) பிடியின் மணவாளா

பச்சை வேய்ப் பணை, கொச்சை வேட்டுவர் ப
திச்சி தோட் புணர் த னியில் வேளே
* எட்டு நாற்கர ஒருத்தல் மாத் திகிரி
எட்டு மாக் குலைய எறிவேலா

எத்திடார்க்(கு) அரிய, முத்த, பாத்தமிழ் கொடு
ஏத்தினார்க்கு எளிய பெருமானே

* எட்டு நாற்கர ஒருத்தல் : விளக்கம் : பக்கம்-66]

வட்ட வடிவும் தனியும் உடைய கொங்கைகளையுடைய மனைவி, பால் மணத்துடன் மழலை பேசும் குழந்தைகள், தாயாகிய கிழவி, ஊர்-நாடு

தான் வைத்த தோட்டம், வீடு, செல்வம், தேடிய பொருள்கள், மற்ற உற்றார் உறவினர், கல்வியறிவு இவை யெலாம் என்னை விட்டு நீங்க

நன்கு ஓட்டி, மிகவும் கிட்டி வரும், பெரிய வருமை மேல் வரும் (காலதூதர்களாகிய) மூடர்கள், பாசக் கயிற்றினைப் பூட்டி என்னை அழைப்பதற்கு முன்பாக

முத்தி வீட்டை அணுகிச் சேரவும், எல்லாவற்றையும் விட்ட ஞானியர் போல் (என்னை) ஆக்கவும். வேதத்தினுள்ளும், குரா மலர்களினுள்ளும் தளிர்கின்ற (உனது) கழலணிந்த திருவடிகளைத் தந்தருளுக.

நெற்றிப் பட்டமும், நான்கு பெரிய தந்தங்களும், (நால் கர) தொங்கு கின்ற கையையும் உடைய யானை(ஐராவதம்) வளர்த்த, தனி பொருந்திய பெண் யானை அனைய நடையையுடைய தேவசேனையின் மணவாளனே!

பசிய மூங்கிலால் கட்டிய (பரண்) பரண் மீதிருந்த, இறுகுல வேடரின் ஊரிலிருந்த வள்ளியின் தோளை அணைந்த தணிகை வேளே!

எட்டு. தொங்குகின்ற கையை உடைய (அருந்தல்) யானைகளும் (அஷ்ட கஜங்கள்) பெரிய மலைகள் எட்டுடனே (அஷ்ட பர்வதங்களுடனே) நடுங்கும்படிச் செலுத்திய வேலாயுதனே!

ஏத்தித் துதிக்காதவர்க்கு அரிய முத்தனே! (பாசங்களில் நீங்கியவனே) பாக்களைத் தமிழில் பாடி போற்றித் துதிப்பவர்கட்கு எளிய பெருமானே

தனி (5½) (+) 2+2+1½ 143

வரிக் கலையின் நிகரான விழிக் கடையில் இளைஞோரை
மயக்கிடு மடவார்கள் மயலாலே
மதிக்குளறி உளகாசும் அவர்க்குதவி மிடியாகி
வயிற்றில் எரி மிக மூள அதனாலே

ஒருத்தருடன் உறவு ஆகி ஒருத்தரொடு பகையாகி
ஒருத்தர் தமை மிக நாடி அவரோடே
உணக்கையிடு படு பாவி எனக்குனது கழல் பாட
உயர்ச்சி பெறு குண சீலம் அருள்வாயே

விரித்(து) அருணகிரிநாதன் உரைத்த தமிழ் எனு(ம்) மாலை
மிகுத்த பலமுடன் ஓத மகிழ்வோனே
வெகுத்(து) அமணர் கழுவேற ஒருத்தி கணவனும் மீள
விளைத்ததொரு தமிழ் பாடு புலவோனே

செருக்கியிடு பொரு சூரர் குலத்தை அடி அற மோது
திருக்கையினில் வடிவேலை உடையோனே

திருக் குலவும் ஒரு நீல மலர்ச் சுனையில் அழகான
திருத்தணிகை மலை மேவு பெருமானே

(143) வரிகளோடு கூடிய கலைமானைப் போன்ற, கண் கடையால் (கடைக்
(கண் பார்வையால்) கிழவர்களை மயக்கும், விலைமகளிரது
நோக்கத்தாலே.

அறிவு குழப்பம் அடைந்து, கையிலுள்ள பொருளும் அவர்களுக்கே கொடுத்து. அதனால் தரித்திரத்தை அடைந்து, வயிற்றில் நெருப்பு மிகவும் மூண்டு எழ, அதனாலே

ஒருத்தருடன் நட்பு பூண்டும், ஒருத்தருடன் பகைமை பூண்டும், ஒருத்தரை மிகவும் விரும்பித் தேடியும், அவர்களோடு

வாட்டத்தையடையும் படு பாவியாகிய எனக்கு, உன்னுடைய திருவடியைப் பாடும்படியான சிறந்த நற்குண நல்லொழுக்கத்தை அருள்வாயே.

விரிவாக அருணகிரிநாதன் பாடியுள்ள (திருப்புகழ் என்னும்) தமிழ் மாலையை மிகுந்த ஆற்றலுடன் ஓத மகிழ்பவனே!

உடல் விளக்க, சமணர்கள் கழு ஏறவும், ஒப்பற்ற மங்கையர்க்கரசியின் கணவனாகிய பாண்டியன் நெடுமாறன், சைவ நெறிக்கு மீண்டு வரவும், சிவஞானத்தை விளைத்த ஒப்பற்ற தேவாரப் பாடல்களைப் புகல்வோனே!

ஆணவத்துடன் போரிட்ட சூரர்களின் குலத்தை அடியோடு அற்றுப் போக மோதித் தாக்கின, திருக்கையினில் கூர்மை பொருந்திய வேலாயுதத்தை உடையவனே!

அழகு விளங்கும் ஒப்புற்ற நீலோற்பல மலர்ச் சுனையைக் கொண்டதாய் அழகு அமைந்த திருத்தணிகை மலையில் வீற்றிருக்கும் பெருமானே.

ஆரபி 144 (16) ம் 1½ 1½ தகிட ½+1+½

வினைக்(கு) இனம் ஆகும் தனத்தினர், வேள், அம்
பினுக்கு எதிர் ஆகும் விழி மாதர்
மிகப் பல மான் தனிற் புகதா வெஞ்
சமத்திடை போய், வெம் துயர் மூழ்கி
கனத்த விசாரம் பிறப்படி நோயும்
கருக்குழி தோறும் கவிழாதே

கலைப் புலவோர் பண்படைத்திட ஓதும்
கழற் புகழ் ஓதும் கலை தாராய்

புனத்திடை போய் வெங் கிலைக்குறவோர், வஞ்
சியைப் புணர், வாகு அம் புயவேளே

பொருப்பு இரு கூறும்படக் கடல் தானும்
பொருக்(கு) எழ வானும் புகைமீள
சினத்தொடு சூரன் கனத் திணி மார்பந்
திறக்(க) அமராடும் திறல் வேலா
திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் பெருமானே.

(144) தீவினையைப் பெருக்குவதற்கு (அநுகூலச்) சம்பந்தமுள்ள கொங்கையை உடையவர், மன்மதனுடைய அம்புக்கு ஒப்பாகும் கண்களை உடைய பொதுமகளிர் (மேல் வைத்த ஆசை காரணமாக)

மிகவும் பலவான அவமானச் செயல்களில் நுழைந்து. கொடிய சண்டைகளில் ஈடுபட்டு. கொடிதான துன்பங்களில் மூழ்கி அநுபவித்து

பெரிய கவலையடைந்து. பிறப்புக்கு அடிகோலும் கருக்குழிகள் தோறும் கவிழாமல் (பல யோனி பேதங்களிற் கருவாய் விழாமல்)

கலைகற்ற புலவர்கள், இசையமையுமாறு பாடுகின்ற, வீரக்கழல் அணிந்த திருவடியின் புகழை ஓதும் திறத்தினை (கலைஞானத்தை) தந்தருளுக:

தினைப்புனத்தினிடை சென்று, கொடிய வில்லேந்திய வேடர்களின் மகளாகிய. கொடி போன்ற வள்ளியைப் புணர்ந்த அழகிய திருப்புயம் வாய்ந்த வேளே!

கிரௌஞ்சகிரி இருகூறுபட, கடலும் வற்றிப் போக, வானமும் புகை கொள்ள.

கோபத்துடன், சூரனுடைய கனத்த. திண்ணிய மார்பு (பிளவு பட்டுத்) திறக்கப் போர் செய்த வலிமை மிக்க வேலாயுதனே!

திருப்புகழ் ஓதும் கருத்துள்ள அடியார்கள் கூடுகின்ற திருத்தணியில் வீற்றிருக்கும் பெருமாளே.

ஹம்ஸத்வனி (17) ம் 15150/5, 145.

வெற்றி செய் உற்ற கழை விற் குழைத்து மதன்
விட்ட கணை பட்ட விசையாலே
வெட்ட வெளியில், தெருவில், வட்ட பணியில், கனல்,
விரித்(து) ஒளி பரப்பு மதியாலே
பற்றி வசை கற்ற பல தத்தையர் தமக்கும், இசை
பட்ட திகிரிக்கும் அழியாதே

பத்தியை எனக்(கு) அருளி, முத்தியை அளித்து, வளர்
பச்சை மயில் உற்று வரவேணும்
நெற்றி விழி பற்(று) எரிய நட்டம் இடும் உத்தமர், நி
னைக்கு மனம் ஒத்த கழல்வீரா

நெய்க் கமலம் ஒக்கும் முலை மெய்க் குறவி இச்சை உற
நித்தம் இறுகத் தழுவும் மார்பா

ஒற்றிய திருச்சலதி சுற்றிய திருத்தணியில்
எப்பொழுது நிற்கும் முருகோனே
எட்டு அசலம் எட்ட நில(ம்)முட்ட, முடி நெக்கு அசுரர்
இட்ட சிறை விட்ட பெருமானே

(145) வெற்றியைத் தர வல்ல, கரும்பு வில்லின் முனையை வளைத்து மன்மதன் செலுத்தின பாணங்கள் உடலின் மீது பட்ட வேகத்தாலும்,

வெட்ட வெளியிடங்களிலும், தெருக்களிலும், வட்டமான பறை போல விளங்கி, நெருப்பை வீசி ஒளியைப் பரப்புகின்ற நிலவாலும்

வசை மொழிகளைக் கொண்டு, அவைகளையே பயின்று பேசும், கிளியையொத்த பல மாதர்களின் வசை மொழியாலும், இசையை எழுப்பும் மூங்கிலாலும் (புல்லாங்குழலின் இசையாலும்) நான் மெலிவுற்று அழியாமல்,

பத்தி நெறியை எனக்குத் தந்தருளி, முத்தியையும் அருள் செய்து, உயர்ந்த பச்சை மயில் மீது ஏறி வரவேண்டும்

நெற்றிக் கண்ணின் தீ பட்டு (மன்மதன்) எரிந்து போக, திரு நடனம் புரிந்தவராகிய சிவபெருமான், உன்னைத் தியானிக்க, அவர் திருவுள்ளத்தில் பொருந்திய திருவடிகளையுடைய வீரரே!

தேன் பொருந்திய தாமரையின் மொக்குப் போன்ற தனத்தையுடைய உண்மை நிலை தவறாத குறத்தி (வள்ளி) அன்பு கொள்ளும்படி தினமும் அவளைக் கெட்டியாய் அணைக்கும் மார்பனே

அலை வீசும் அழகிய நீர் நிலை சூழ்ந்த திருத்தணி என்னும் தலத்தில் எப்பொழுதும் வீற்றிருக்கும் முருகோனே!

அஷ்டகிரிகள் வரையில் எட்டிப் பரவவும், நிலம் முழுமையும் (பரவவும்), தங்கள் முடியை (அரசாட்சி அதிகாரத்தை) தள்ளிச் செலுத்தின அசுரர் கிட்ட (தேவர்களது) சிறையை நீக்கின பெருமானே.

தொலைவிலாத பேராசை [பாடல் 118 - உடலினுடு]

பற்று, அவா, ஆசை, பேராசை

1. உள்ள பொருளில் வைத்திருக்கும் பிடிப்பு பற்று எனப்படும்
2. இன்னும் இது வேண்டும், அது வேண்டும் என்று கொழுந்து விடுகின்ற நினைவு அவா எனப்படும்.
3. பிறர் பொருளை விரும்பி நிற்பது ஆசையாகும்
4. எத்தனை வந்தாலும் திருப்தியின்றி, நெய். நெய் விட எரிகின்ற நெருப்பின் தன்மை போல, சதா உலைந்து அலைந்து மெலிடுகின்ற விருப்பத்துக்கு பேராசை என்று பெயர்

[வாரியார்: பக்கம் 74]

விடை கொளுவு பாகர் [பாடல் 119 - உடையவர்]

உலகமெல்லாம் அழிந்த போது, அறம் ஒன்று மட்டும் அழியாது விடை வடிவாகிச் சென்று சிவபெருமானை அடைந்தது. இறைவன் அதன் மீது ஆரோகணித்தருளினார். அகில உலகங்களையும் தாங்கும் சிவ பெருமானை அறம் தாங்குகின்றது

வையம் ஏழுக்கு [பாடல் 120 - உய்யஞான]

கீழுலகம்:

அதல, விதல, சுதல, தராதல, ரசாதல, மகாதல, பாதாள

மேல் ஏழுலகம்:

பூலோகம், புவர் லோகம், சுவர்லோகம், மகா லோகம், சன லோகம், தபோ லோகம், சத்ய லோகம்

நிறைப்புகழ் [பாடல்: 131. சினத்தவர்]

எல்லாப் பொருள்களும் நிறைந்த திருப்புகழ்:
வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், உபநிஷதம், மருத்துவம்
யோகம், சங்கீதம் முதலிய யாவும் திருப்புகழில் நிறைந்துள்ளன.

எட்டு நாற்கர வொருத்தல் [பாடல் 142. வட்ட வாட்டனை]

எட்டு தொங்குகின்ற துதிக்கையையுடைய (ஒருத்தல்) யானை.
அஷ்ட கஜங்கள் கிழக்கு முதல் முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம்

இவைகட்கு முறையே பெண்யானைகள்.
அப்பிரமை, கபிலை, பிங்கலை, அநுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

பக்கம்

தொலைவிலாத பேராசை ... 65
விடை கொளுவு பாகர் ... 65
வையம் ஏழு ... 65
நிறைப்புகழ் ... 66
எட்டு நாற்கர பொருத்தல் ... 66